www.tamilarangam.net

# சர்வதேச தமிழர்-2000

**SARVADESA TAMILER:**
*Norges Tamilskblad for informasjon, kunnskap, kultur, fred, framgang og solidaritet!*




குமார்

## சிறார்கள்-சிறப்பிதழ்
## SPESIALUTGAVE:BARN




துரொண்கைம் ஈழத்தமிழர்சங்கவிழா










கனடாவில் பாராட்டுப்பெற்ற அன்ரன்டேவிட்,
ஒஸ்லோவில் இசைத்தட்டு வெளியிட்டார்.




ஜப்பானிலிரு[redacted]து, எங்கள் அனைவரின் புத்தாண்டு[redacted]வாழ்த்து

**Happy New Year**

**2000**

சச்சி, சகி, சச்சிக்கோ, அங்கித...







த. புவனேந்திரன்



நா. செல்லத்துரை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சர்வதேசதமிழர் சந்திப்புக்களம்:**

**அன்புமிக்க நண்பரே!**

புதுவருடம்!புதுநூற்றாண்டு!புதுஆயிரத் தாண்டு!என முச்சிறப்பு பெற்றுள்ள 2000 சகலர்க்கும் நன்மைகள் சேர்க்க ட்டும்!வாழ்த்துக்கள்!!

கோடைவிடுமுறையில் தாங்கள் சீனா, கொரியா,யப்பான் போய்வந்த பயண அனுபவங்களை,சுவாரசியமாக,கவிதை மூலம், சொல்லியிருக்கிறீர்கள்.சந்தோ சம்!சர்வதேசதமிழர் 6ம்ஆண்டுநிறைவு இதழ் கண்டு மகிழ்ச்சி!

நார்வேயில் இருந்துகொண்டு,6வருடங் களாக சிறப்பானமுறையில் சர்வதேச தமிழர் இதழை தாங்கள் வெளியிட்டு வருவது, பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனை,தான்!பின்லாந்து பற்றியஉரை அரியபல விடயங்களைக் கூறுகிறது. தமிழர்கண்ட,வாழ்வியல் நல்லஆய்வுக் கட்டுரை,யோகாசனம் பற்றிய உதயமூ ர்த்தியின் விளக்கமும்,ராம்பாஸ்கரின் பேட்டியும் பயனுள்ள தகவல்களைத் தருகின்றன.சர்வதேசதமிழர் புத்தாண்டி ல் நன்குவளர்ந்து,வெற்றிகரமாக முன் னேறி,புகழுடன்,விளங்கவாழ்த்துகிறேன் 2000 துவக்கத்தை சென்னைவாசிகள் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். நோர்வே உட்பட உலகமே அதனை மகிழ்வாக வரவேற்றது சிறப்பு!

இங்கு தமிழில் புதிசுபுதிசாக பத்திரி கைகள் வந்துகொண்டிருக்கின்றன. புத்தகங்களும் அதிகம் வெளியாகின் றன. பெரிதுபெரிதாக நாவல்கள் எழு துவதில் எழுத்தாளர்கள் ஆவல்காட்டு கிறார்கள்.புத்தகக்கண்காட்சி நடந்து முடிந்தது.புத்தகப்பிரியர்கட்கு நல்ல பொழுதுபோக்கு!விற்பனையும் கணிச மாக நடைபெற்றது.

2000 கார்த்திகை 12ல் எனது 80ம் வயது நிறைவுபெறுகிறது.நான் உற்சா கமாக படித்துக்கொண்டும்,எழுதிக்கொ ண்டும் இருக்கிறேன்.

**அன்புடன்..வல்லிக்கண்ணன்,**

**10,Vallalar Flats,New street, Lloyds rd,Chennai.600005,India**

(தங்கள் 80ஆண்டுநிறைவை சீரும்,சிற ப்புடன் கொண்டாட வாழ்த்துகிறோம்! இலக்கியசேவையை பாராட்டி நண்பர் கள் விழா எடுக்கவேண்டுகிறோம்!ஆர்)

---

**மதிப்புமிகு ஆசிரியருக்கு!**

மட்டுநகர் தமிழ்மகளின் இனிய வணக் கங்கள்!சமூகக்கறைகளை துடைக்க வென எழுதுகோல் எனும் ஆயுதத்தை 15வயதிலேயே ஏந்திக்கொண்ட நான் இன்றுவரை நாடகம்,கதை,கவிதை,கட் டுரை என வானொலி,பத்திரிகைகட்கு எழுதிவருகிறேன்.இவ்வேளையில் களு த்துறைசிறையில்,வாடும்,அரசியல்கைதி யான வல்வை.மனோகரன்(டி . வாட்) அவர்கள் எழுத்துத்துறையில்,துடிப்பு மிக்க எனக்கு,நோர்வேயிலிருந்து இப்ப டி ஒரு இதழ் வருவதாகக்கூறி,தங்கள் முகவரியும் தந்தார்.மிகவும் சந்தோசம் அடைந்தேன்.என் தமிழ்உறவுகளுக்கா ய் என் பேனா பணிசெய்யவேண்டும். சர்வதேசதமிழரை அறிமுகம் செய்க!

**சீ.வசந்தகுமாரி,பிள்ளையார் கோவில்வீதி,மாவடிவேம்பு.1,சித் தாண்டி,மட்டக்களப்பு,இலங்கை**

---

**அன்பும்,மதிப்பும்மிக்க நண்பரே!**

சர்வதேசதமிழர் கண்டு மிக்கமகிழ்ச்சி! இத்துடன், சந்தாஆதரவும் அனுப்புகி றேன்.2000ல்,மேலும் புகழும்,வெற்றியும் கிட்டட்டும்.இத்துடன் எனது ஆக்கங்க ளும் தந்து ஆதரவு தரவுள்ளேன்.என் உருவகக்கதைகள்அடங்கிய,கொந்தல் மாங்காய் எனும் நூல் அச்சிடப்பட்டு விட்டது.விரைவில் சர்வதேசதமிழருக்கு பிரதி அனுப்பப்படும்.சர்வதேசதமிழரில் வரும் ஆக்கங்கள் உலகத்தமிழர்களா ல் படிக்கப்படுவதால்,பிரபல கலைஞர்: நவாலியூர் செல்லத்துரை பற்றிய கட் டுரை ஒன்றை அனுப்பியுள்ளேன். நாம் யார்க்கும் குடியல்லோம்!நமனை அஞ்சோம்!தமிழ்,தமிழர் வாழ்க!வளர்க!

**வண்ணை தெய்வம் - பாரீஸ்**

---

**பேரன்புடையீர்,**

வணக்கம்! தங்கள் சர்வதேசதமிழர் இதழ்கண்டேன்.மகிழ்ந்தேன். நார்வேயி லிருந்து தமிழ் இதழா? இரட்டிப்புமகிழ் ச்சி!தங்கள் முயற்சிக்கு பாராட்டுக்கள் பற்பல!!தொடர்ந்து இதழ்களை அனுப் பி உதவுக!எனது ஆக்கங்களும் அனு ப்பி ஆதரவுதருவேன்.நார்வேயிலிருந்து உலகமெங்கும் தமிழ்மணக்கச்செய்யும் தங்களுக்கு தமிழர்களாகிய நாங்கள் என்றென்றும்கடமைபட்டுள்ளோம்.நன்றி

**ஸ்வீட்லின் பிரபாகரன்,கிறிஸ்தவ இலக்கியசங்கம்,த.பெ.501, சென்னை600003, தொ.5354296 தொ.ந.:00.91.44.5354297**

---

**அன்பின் ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் தொடர்ந்தும் புதுப் பொலிவுடன் மலர எம் வாழ்த்துக்கள்! 1981.புரட்டாதியில் 9 தமிழர்களால் (முக்கியமாக:லண்டன் ஆ.பாலேந்திரா, க.ரவீந்திரன்)தொடங்கப்பட்ட,ஈழத்தமிழ ர் சங்கம்,இனபேதமின்றி பல்லினமக்க ளுடன்,புத்தாண்டுவிழாவும்,பிற சமயவி ழாக்களும் கொண்டாடிவருகிறது. கலைநிகழ்ச்சிகளில் காவடிநடனம், மீனவநடனம்,உழவர்நடனம் என்பன நோர்வேமக்களை பெரிதும் கவர்ந்தது டன்,பல மக்கள்உயர்பாடசாலைகளிலு ம்,நகரசபைமண்டபங்களிலும் நடத்தப் பட்டு,நோர்வே தொலைக்காட்சியிலும் காண்பிக்கப்பட்டன.ஆரம்பகால பயிற் றுனர்களான ஆனந்தி பாலேந்திரா, யோகா விஜயபாலசிங்கம் ஆகியோர் நாம் மறந்துவிடமுடியாது.படிப்படியாக செயல்பாடுகளை விரிவாக்கிய சங்கம் 1987ல் ஈழத்தமிழர் விளையாட்டுக் கழகம் நிறுவி,கம்பன்,வள்ளுவன்,பாரதி என இல்லங்கள் அமைத்து,உள்ளக, வெளியக விளையாட்டுப்போட்டியுடன், நோர்வேஜிய அணிகளுடனும்,ஏனைய நோர்வே தமிழ்சங்கஅணிகளுடனும், மோதி வென்றும் உள்ளது.நோர்வேரீதி யாக கரபந்து,உதைபந்துபோட்டிகளை யும் நடத்தியுள்ளது.

1988ல் 9பேர் கொண்ட பூரணநிர்வாக அமைப்பு(தலைவர்,செயலர்,காசாளர்,உ ப தலைவர்,உபசெயலர்,விளையாட்டுப் பொறுப்பாளர்,பத்திரிகை-வானொலிபொ றுப்பாளர்,சங்கஉடமைப்பொறுப்பாளர், கலைச்செயலர்) ஆரம்பமாகி,திறமாக இன்றுவரை இயங்கிவருகிறது.

---

புத்தாண்டு,தைப்பொங்கல்,சிவராத்திரி, வாணிவிழா,நத்தார்விழாக்களை ஒட்டி -சலங்கை- இதழ் வெளியிடப்பட்டது. 1994ல் இந்துமன்றம் என ஒரு சைவ சமயபிரிவும் ஆரம்பிக்கப்பட்டது.அது மாதமொருமுறை(2ம் வெள்ளி)பூசை, ஆராதனையுடன்,பின் சமயவகுப்பும் நடாத்துகிறது.தைப்பொங்கல்,சிவராத்தி ரி,நவராத்திரியில்(10நாட்கள் நெதர்லா ந்திலிருந்து,பூசகர்,வரவழைக்கப்பட்டு) பூசை-ஆராதனை செய்யப்படுகிறது. 1995ல் தமிழ்சிறார்களுக்காக சிறுவர் மன்றம் எனும் பெயரில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு,பிரதி சனியும்,10-13 மணிவரை நடாத்தப்படுகிறது. அனுப வம் வாய்ந்த ஆசிரியர்களால் தமிழ், சைவம்,கிறிஸ்தவம்,பொது அறிவு,கணி தம்,நுண்கலைகள்,போதிக்கப்படுகிறது. ஒவ்வொருஆனியும் சிறுவர்மன்றம் தன் ஆண்டுவிழா கொண்டாடுகிறது.மன்றத் தின் மாணவர்தொகை கூடிவருகிறது. 1997தொடக்கம் பரதநாட்டியவகுப்பும் நடாத்தப்பட்டுவருகிறது.2001ல் சங்கம் 20வருடவிழா,நன்கு கொண்டாடவுளது தென்துரண்டலாக்கில் உள்ள வெளி நாட்டார்சங்கங்களில்,தொன்மை வாய்ந் தது எம்சங்கம்! 1998ல் துரொண்கைம் நகரின் 1000ஆண்டு நிறைவுவிழாவுக்கு ஆடியகண்ணன் நடனம்,1000-ஆண்டு மலரில்,இடம்பெற்றது.பெருமைக்குரியது நம்நாட்டின் போர்சூழலால் இடம்பெயர் ந்த நம்சிறார்கட்கு தமிழ்சங்கம் தன் சேவையால் நம்மொழி,கலாசாரங்களை தெளிவுபடுத்திவருகின்றது.இங்கு பயி லும் நம்சிறார்கள் தமிழ்மொழி,கலாசா ரம்,சமயத்தில்,சிறந்துவிளங்குகின்றனர். வெளிநாட்டில்வாழும் தமிழர்க்கு இத்த கையஅமைப்புகள் வரப்பிரசாதமே! மலேசியாவிலிருந்து வந்த ஒருஉறவி னருக்கு,சர்வதேசதமிழரை காண்பித் தேன்.அவருக்கு நன்கு பிடித்துவிட்டது நான் சேர்த்துவைத்துள்ள பழையபுத்த கங்களை வாங்கிசென்றுள்ளார்.சந்தா செலுத்தி,சர்வதேசதமிழரை பெறவிரும் புகிறார்.அவருடன்,தொடர்புகொள்ளவும்.

**த.தியாகலிங்கம்-துரொண்கைம் ஈழத்தமிழர்சங்கம்,தொ.72585287**

**Storflata.5, 7029 Trondheim,Norway**

---

**அன்புடையீர்,**

உரியநேரத்தில் சர்வதேசதமிழர் இதழ் வரவில்லை எனில் எதையோ இழந்த பரிதவிப்புஉணர்வு,ஏற்படுகிறது.இதழை கண்டதும் ஏற்படும் மகிழ்ச்சி,அபாரம்! எமது யோகஆராய்ச்சி சம்பந்தமாக தங்களைப் போன்றவர்கள் தரும் ஊக்கம் அளப்பரியது! யாழ்ப்பாணம், தமிழ் தந்த நாவலரின் வாரிசுபோன்ற தாங்கள் யோகக்கலையை மேலும் உலகறியச் செய்ய உதவவேண்டும். 2000ஆண்டில் 1லட்சம்பேருக்கு,யோகா தியானம் கற்பிக்க ஆசை!எந்தநாட்டுக் கும்,போய் இதனை கற்பிக்கவுள்ளேன். ஆர்வத்துடன் அழைக்கவிரும்புவோர், அமைப்புகள் உடன் தொடர்புறுக! தங்களின் விடுமுறைப்பயணக்கவிதை யை அளித்தவிதம் அருமை! வர வர சர்வதேசதமிழர் மின்னிமிளிர்கிறது.

**யோகாஆசிரியார் - ராம்பாஸ்கர் முகுந்தனூர்(அ)அம்மையப்பன் வழி.613701,தமிழ்நாடு,இந்தியா**

**அன்பானதமிழர்களே! இதுவரை,உங்களுக்கு பலஇதழ்கள்,கிட்டி யும்,சந்தா அனுப்பாதோர் உடன் சந்தா அனுப்பி உதவுக! நன்றி!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்:2000-1

## ஆசிரியர்கருத்து: தமிழர்களும் குமார்.பொன்னம்பலமும்!

இலங்கைத்தமிழர்களின் முதுபெரும்கட்சியான அகிலஇலங்கைத்தமிழ்க்காங்கிரசின் முக்கிய தலைவராகவும்,பெரும்பாலான தமிழர்களின் மனஉணர்வுகளை,தனது தந்தையாரான,பிரபல வழக்கறிஞர்:ஜீ.ஜீ.பொன்னம்பலம் பாணியில் துணிவாக,அச்சமின்றி சிங்கத்தின்குகையினுள் முழக்கிய மாமனிதர்:குமார் பொன்னம்பலம், பாசிசவெறிபிடித்த,தூரநோக்கற்ற,மூடத்தனமான,பிற்போக்குச்சக்திகளால் பட்டப்பகலில்,படுபாதகமாக,கொல்லப்பட்டமை,கவலைக்குரியது, கண்டனத்துக்குரியது,மன்னிக்கமுடியாதது!

1802ல் பிரிட்டனின் முடிக்குரிய காலனியாகிய இலங்கையில் கோல்புறூக்கமிசன் ஆலோசனைப்படி 1833ல்,16 பேர் கொண்ட சட்டசபை நிறுவப்பட்டது.1912ல் தெரிவுமுறையும்,அறிமுகமாகி,21பேர்(11அதிகாரிகள்,1நகரஐரோப்பியர்,1 கிராமஐரோப்பியர்,1பறங்கியர்,1படித்தஇலங்கையர்(சேர்.பொன்.இராமநாதன்),மீதி அதிகாரியல்லாதோர்)தெரிவானார்கள்.1924ல்,2இந்தியதமிழர் 3முஸ்லிம்கள்,1மேல்மாகாண-இலங்கைதமிழர் 2பறங்கியர்,3ஐரோப்பியர் என11பேர்-இனரீதியாயும்,23பேர்-பிரதேசரீதியாயும்,12பேர்-அதிகாரிகளாயும்,என மொத்தம் 49பேர் நியமனமானார்.

இலங்கை தேசியகாங்கிரசின் முக்கியநிர்வாகிகளாக சேர்.பொன்.அருணாசலம் போன்றோர் இலங்கைச்சுதந்திரத்துக்கு பாடுபட்டாலும்,காலப்போக்கில் 1931ல் சகலர்க்கும்வாக்குரிமை சட்டம் வந்ததும் பாராளுமன்றபெரும்பான்மையால் படிப்படியாக அதிகாரம்கூடிய சிங்களத் தலைமைகள் தமிழரை ஒதுக்கியபோது,தான் அகிலஇலங்கைத்தமிழ்காங்கிரஸ் பிறந்தது. போர்த்துக்கீசர்,ஒல்லாந்தர்,பிரிட்டிஸ் ஆட்சியின் முன்பு தமிழர் அரசுகள் வட-கிழக்கில்,(ஏன் கண்டியிலும்,கண்ணுச்சாமி,எனும் விக்கிரமஇராசசிங்கன் அரசு)இருந்ததால் தமிழர்க்கு தனித்து வாழ உரிமை இருந்தது.எனினும் 50:50 பிரதிநிதித்துவம் சிறுபான்மையருக்கு தந்தால் சிங்களவருடன்,சேர்ந்துவாழமுடியும்!எனும் தூரநோக்குள்ள,ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் வாதம், 1944ல் பிரிட்டனிலிருந்து வந்த சோல்பரி பிரபுவின் காதில்,செவிடன் காதில் ஊதிய சங்கொலியாய்மாறியது.1948ல் தந்தை:செல்வா அ.இ.த.காங்கிரசிலிருந்து பிரிந்து,தமிழரசுக்கட்சியை தொடங்கியதும்,பின்பு 1976ல் வட்டுக்கோட்டை மாநாட்டில் செல்வா-ஜீ.ஜீ-தொண்டா இணைந்து,குரல்கொடுத்தாலும்,மூவரதும் அரசியல்பாதை நடைமுறையில் இணையாதமை, தமிழர் செய்த துரதிர்ஸ்டமே ஆகும்.தந்தைக்குப்பின்,தமிழர் மனங்களை வென்ற தனயன் குமார்.பொன்னம்பலம்,கட்சியை வழிநடத்தினார் 12.8.1938ல்,யாழ்ப்பாணத்தின் மூளை எனக்கருதப்படும் வடமராட்சியில் காங்கேசு கணபதி பொன்னம்பலம்(ஜீ.ஜீ.)அவர்கட்கும்,அழகுமணிக்கும்,பிறந்த இவர்,யாழ்.அரசஅதிபராகவிருந்த பிரபலதமிழர் முருகேசம்பிள்ளையின் மகளான யோகலட்சுமியை மணந்தார். உயர்கல்விகள் பயின்று பாரிஸ்ரராகி தந்தையாரைப் போல் புகழ்பெற்ற,அதிதிறமையான வழக்கறிஞராகப் பணிபுரிந்தார்.தமிழ்நாட்டில் சர்க்காரியாகமிசன், வழக்கிலும்,கலைஞருக்கு ஆதரவாக தந்தையாருடன் தோன்றினார். தமிழ்,ஆங்கிலத்தில் மட்டுமன்றி சிங்களத்திலும்,ஏழை,எளியமக்களுக்காகவும் நீதிமன்றுகளில் தூள் கிளப்பினார். எந்தமொழியும் தமிழனுக்கு சொந்தமொழியே! எனத் திறமையாகப்பேசி வாதிட்டுவென்றார். 1966ல் அ.இ.தமிழ்காங்கிரஸ் இளைஞர்பிரிவு செயலாளரான,இவர்,தந்தையின் மறைவின்பின் கட்சியை வழிநடத்தினார்.1977ல் பாராளுமன்ற தேர்தலில்,போட்டியிட்ட,இவர்,1982ல் இலங்கை சனாதிபதிதேர்தலிலும் போட்டியிட்டு தமிழர் தனிக்குரலை உலகுக்கு வெளிக்காட்டினார். கொழும்பில் இருந்துகொண்டே துணிவாக அரசின் போக்கைக் கண்டித்த இவர்,த.வி.புலிகளின் போக்கை ஏற்பதையே,பிரிட்டிஸ்காலத்துக்கு பின்வந்த சிங்களஅரசுகள் தமிழர்கட்கு மாற்றுவழியாகத் தந்தன!என்பதை ஆணித்தரமாக சுட்டிக்காட்டினார்.கொழும்பில் கைதான எண்ணுக்கணக்கற்ற தமிழர்கட்கு காசு பெறாமலே வாதாடினார்.வெளிக்கொணர்ந்தார்.கொக்கட்டிச்சோலையில் பலதமிழர்கள்,இராணுவத்தால் கொல்லப்பட்ட வழக்கில்,மட்டக்களப்பு செல்ல பலவழக்கறிஞர்கள் மறுத்தநிலையில் இவர்,யோசப்.பரராசசிங்கம்,பா.உ.வின்,வேண்டுதலை,ஏற்று,உடன்சென்று,சிங்கமென,கர்சித்தார்

அண்மையில்,ஐரோப்பா வந்து தமிழீழமாநாட்டில்,லண்டன்,டென்மார்க்,பிரான்ஸ் என பலநாடுகளில் கலந்துகொண்ட இவர்,புலம்பெயர்தமிழரின் அன்பை தனது,அழகுதமிழாலும்,அறிவாலும் கவர்ந்துகொண்டார்.ஐரோப்பாவின் தமிழ்ஒளி தொலைக்காட்சியில் கேள்விநேரத்தில்,முதலாவது கேள்வியாக தமிழீழ-நிழல்அரசு பற்றிய சர்வதேசதமிழர்-ஆசிரியரின் கேள்விக்கு மிக அருமையாகப் பதிலளித்தார்.1994இலிருந்தே இவர்மீதும் இவரதுகொள்கைகள்மீதும்,அன்பும் மதிப்பும் கொண்டிருந்த காரணத்தால்,சர்வதேசதமிழர்இதழ்,இவருக்கு தவறாது அனுப்பப்பட்டு வந்ததுடன்,இவரை,த.வி.புலிகள்,ஒரு சனநாயக அரசியல்பேச்சாளராக நியமிக்கவேண்டும்!என தமிழீழத்தேசியதலைவரிடம் வேண்டுகோளும் விடுவிக்கப்பட்டது.மாமனிதர்,எனும் உயர்விருது வழங்கி அவரை கௌரவித்தமைக்காக புலம்பெயர்ஈழத்தமிழர் மட்டுமன்றி,உலகத்தமிழர்கள் சகலருமே புளகாங்கிதம் அடைவார்கள்!நன்றி! அ.இ.த.காங்கிரஸ்கட்சி தமிழர்களின் உண்மைக்குரலாக,சனநாயககுரலாக வளர்ச்சிபெற,ஈழத்தமிழருடன்,புலம்பெயர்தமிழரும் தயாராகவுள்ர்! துணைவியார்:யோகி,தலைமைக்கு வரவேற்பு!!



**தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம், சமாதானம் கருதி, ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச் சஞ்சிகை !**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வதேசதமிழர் செய்திகள்:

**ஒஸ்லோ-இசைத்தட்டுவெளியீடு**

நோர்வேயின் பிரபல தமிழ்பாடகர் அன்ரன் டேவிட்டும்,அவரது புதல்வியர்:அனோஜா,நிருந்தாவும்,மற்றும் எஸ்.பி.பி.சரன்,பெபி ஆகியோரும் பாடிய, சென்னை போல்ராஜ் இசையிலமைந்த இசைதட்டு வெளியீடு,1.1.2000,ஒஸ்லோ கத்தோலிக்கதேவாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.கனடாவில் இது வெளியிடப்பட்டு அமோக ஆதரவும்பெற்றது. இளையபாரதி அறிமுகத்துடன் தொடங்கும் இசைத்தட்டு 10 இனிமையான பாடல்களை அளித்து மகிழ்விக்கிறது.

**ஒஸ்லோ-இலங்கை தூதரகம்:**

ஒஸ்லோ புருகாத்தாவில் இலங்கை தூதரக-கொன்சலேற் பிரிவு தையில் ஆரம்பமாகியுள்ளது.கொன்சல் ஜெனரலாக திரு.விபுல வணிகசேகரா பதவி ஏற்றுள்ளார்.இவர் தமிழ்நாட்டில் கர்நாடகஇசை பயின்றவராம். கடவுச்சீட்டு கருமங்கள்,யாழ்செல்ல,பாஸ்விண்ணப்பித்தல் என பல விடயங்கள் இங்கு கவனிக்கப்படுமாம்.தூதரககொன்சலாட் திறப்புவிழாவில்,பல தமிழ்வர்த்தகர்கள் கலந்துகொண்டதாக அறியவருகிறது. சர்வதேசதமிழருக்கும் அழைப்பிதழ் கிடைத்ததுடன்,தொலைபேசியில் விசேட அழைப்பும் தூதரக முதல்வரால் விடுக்கப்பட்டது.எனினும்,வேலைகாரணமாக ஆசிரியரால் கலந்துகொள்ளமுடியவில்லை. த.வி.புலிகட்கும்,அரசுக்குமிடையே,பேச்சுவார்த்தை தொடங்கி, அமைதித்தீர்வு வருவதையே சகலதமிழர்களும் விரும்புகிறார்கள்!என ஆசிரியர் அவருடனான தொலைபேசி சம்பாசனையில் வலியுறுத்தினார்.

தூதரகமுதல்வர் பலதமிழர்களையும் சந்தித்துவருவதுடன்,அம்மறுட்டிலுள்ள சிவசுப்ரமணியர் ஆலயத்திற்கும் விஜயம் செய்தார்.சங்கீதகச்சேரி நிகழ்த்தவும்,ஆவலாகவுள்ள இவர்,மலேசியாவில் பணிபுரிந்தராம்.தொ.பே.22170959

**கைதானதமிழர் விடுதலை:**

அண்மையில் தஞ்சம்மறுக்கப்பட்டு, ஒளித்துவாழ்ந்த தமிழர் ஒருவர்,துறம்சோ நகரில் நோர்வே பொலிசாரால் கைதாகி ஒஸ்லோ கொண்டுவரப்பட்டார்.அவர் உடனே த.அ.ந.குழு தலைவரான,சச்சி.மயில்வாகனத்தை(90517376) தொடர்புகொண்டார். கைதான பின் எதுவும்செய்வதற்கு,கடினமானநிலையில் சிலஆலோசனைகளை வழங்கினார். ஒஸ்லோவில்,இலங்கைதூதரகத்துக்கு அழைத்துச்சென்ற பொலிசார் அவருக்கு பாஸ்போட் வழங்கும்படி தூதரகமுதல்வரை வேண்டினர்.விண்ணப்பத்தில் கையெழுத்திட தமிழர் மறுத்ததனால் எதுவும்செய்யமுடியாத பொலிசார் அவரை,விடுவித்தனர்.அவரும் பறந்தார்

**இனதுவேசஎதிர்ப்புநிலையம்:**

தமிழ்நாட்டுத்தமிழரான திரு.அனந்த கிருஸ்ணன் தலைவராகவுள்ள பிரபலமான இனதுவேசஎதிர்ப்புநிலையத்தில் அண்மையில் அரசியல்தஞ்சம்கோரிய தமிழ்அகதிகள்நிலைமை தொடர்பாக கூட்டமொன்று நடந்தது.அங்கு அண்மையில் இலங்கைசென்று நிலைமையை அவதானித்து,பலதமிழர்களுடன் நேரடியாகப்பேசி,வீடியோபடமும் பிடித்துவந்த(ஒருதமிழரின்உதவியுடன்) நோர்வேஜியவழக்கறிஞர் உரையாற்றினார்.அவரது அறிக்கை நீதிஅமைச்சுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம்.கொழும்பில் வீடியோஎடுத்தபோது பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவமும் இடம்பெற்றதாம்.

**மோல்டே தமிழ் கலை-கலாசார மன்றம் நடாத்திய பெருவிழா:**

1988ல் தொடங்கிய இம்மன்றம்,தைப்பொங்கல்விழாவை வருடாந்தம் சிறப்பாககொண்டாடுவது வழக்கம்.15.1.2000 புத்தாயிரத்தை வரவேற்கும்விழாவாக மாபெரும்விழா நடாத்தப்பட்டது.மாலை 3மணி-10மணிவரை,இசைக்கச்சேரி,பரதநாட்டியம்,சிறுவர்நடனம்,நாடகம்,கிராமியநடனம்,என,பலநிகழ்ச்சிகள் கொம்யூன் பொதுமண்டபத்தில் நடந்தபோது, பெருந்தொகையாக திரண்டிருந்த தமிழரை மட்டுமன்றி கூடியிருந்த நோர்வேஜியரையும்,மகிழ்ச்சிவெள்ளத்தில் ஆழ்த்தியது.

படிப்படியாகவளர்ந்த இம்மன்றம்,இன்று கோவில்பூசைகள்,விழாக்கள்,கோடைகாலவிளையாட்டுப்போட்டிகள் என நடத்திவருகிறது. தகவல்:எஸ்.சந்திரா

**சர்வதேசதமிழர் சேவையில் ஜேர்மனி-தம்பி.புவனேந்திரன்!**

உலகதமிழர்க்கு மனிதாபிமானசேவை செய்வதில் முன்னணியிலுள்ள பலதமிழர்களில்,சர்வதேசதமிழர் இணைப்பாளர் சமூகஜோதி: தம்பி புவனேந்திரன் குறிப்பிடத்தக்கவர்.1986தொடக்கம் இன்றுவரை இவரதுபணி தொடர்கிறது. பழைமைவாய்ந்த குரும்பசிட்டிசன்மார்க்கசங்கஆயுட்கால உறுப்பினரான இவர்,ஊனமுற்றஇளைஞர்க்கு முச்சக்கரவண்டி,இலவச வளர்ந்தோர்கல்வி,அகதிகட்கு உலர்உணவுஉதவி,மட்டு.பல்கலைக்கழகமாணவர்க்கு உதவி,காதுகேட்கும்கருவிகள் அன்பளிப்பு,பாடசாலைமாணவர்க்கு உபகரணம்,அகதிகட்கு துணி,பணஉதவி, 300 கண்ணாடிகள் பார்வைகுறைந்தோர்க்கு அன்பளிப்பு, என பலவழிகளில் நண்பர்களிடம் சேகரித்தும் இலங்கை,இந்திய தமிழர்கட்கு உதவிவருகிறார்.இவரது சேவையை பாராட்டி பொன்.பாலகுமார் செயலராயும்,சு.சிவானந்தம் தலைவராயுமுள்ள குரும்பசிட்டி சன்மார்க்கசங்கம் சமூகஜோதி என பட்டமளித்தது.ஹாம் நகர ஆலய தலைவராயும் விளங்கும் இவர்பணி மேலும் சிறக்கவாழ்த்துகள்! Thambi Buvanendran,Holzener W.27 58239SchwerteGermanyT230482811

**உலகத்தமிழர் சேவையில் ஜேர்மனி:ஸ்ரீபதி சிவனடியான்!**

இரங்கும்இல்லம் எனும் அமைப்பின் மூலம் உலகதமிழர்க்கு பத்திரிகைச் சேவையும்,மனிதாபிமானசேவையும் செய்யும் ஸ்ரீபதி சிவனடியான் பாராட்டுக்குரியவர்.ஜேர்மன்பெண்மணியை,மணந்தாலும்,தமிழ்,தமிழரில் பற்றுமிக்கவர். இவரது,பயணம் பத்திரிகை,கனடாவில் நட்பின்நாயகன்,ஆர்.என்.லோகேந்திரலிங்கம்,அவர்களின் உதயன் வாரஇதழுடன் இணைந்து,தற்போது ஐரோப்பா எங்கும் பவனிவருகிறது.நட்புஇதழ்கள் பல,மாற்றாக கிடைப்பதற்கு நன்றிகள்! Sympathy Home,pb.750162, 60531 Frankfurt,GermanyTel.00.49.696937 74 Fax.0049.69.694442

**தத்தெடுக்கும் சேவை உதவி:**

வறிய,யுத்தப்பிரதேசநாடுகளில் சிறுபிள்ளைகளை தத்தெடுத்து,அந்தந்த நாட்டிலே படிக்க,வாழபணஉதவிசெய்யும் அமைப்புகளில்-பிளான் இன்ரநாசனல் நோர்கே-யும் ஒன்று.இதன்மூலம் உதவிசெய்ய,பெறவிரும்பின்,தொடர்பு Plan International Norge,Wesselsgt.8 pb.1,St.Olavsplass,0130 oslo,Norway Tel.0047.22.007600,fx.333232 www.plan-norge.no info@plan.norge.no

**தேன்தமிழ்ஓசை வானொலி:**

நோர்வே பேர்கனிலிருந்து தேன்தமிழ் ஓசைவானொலி,தமிழர்க்கு சிந்தைக்கும்,செவிக்கும்,பயனான சேவை செய்துவருவதற்கு,எஸ்.சந்திரமோகன் உட்பட பாடுபடும் சகலர்க்கும் பாராட்டுக்கள்! RadioTamilBergen,100,3,103,3,107,5

**வரலாற்றில் கச்சத்தீவு நூல்:**

உணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலனின் வரலாற்றில்கச்சத்தீவு வரலாற்றுநூல் அருமையான ஒருநூலாக உள்ளது. Singaravelan,Gen.Sec.Naam Tamilar Iyakkam,2.Kaveri Salai,Devadanam Trichy.620002,Tamil Nadu, India

**இளம்புயல் பிரசாந்த் இதழ்:**

குட்லக் பட சிறப்பிதழாக,முதல்இதழ் சபீதா.ஜோசப்பை,ஆசிரியராகக்கொண்டு அமோகமாக வெளிவந்துள்ளது. பிரசாந்த் பற்றியசெய்திகளுடன்,அவர் பேட்டி,அருமையாகவே அளித்துள்ளார் தொடர்ந்து பல்சுவைஅம்சங்களுடன் வெளிவந்துதமிழர்சமுதாயத்துக்குதவுக பிரசாந்த் நற்பணிமன்றங்கள் மூலம், தமிழ்நாடெங்கும் தகவல்சேவை(கல்வி தொழில்)மையங்கள் தொடங்குக!நன்றி இதழ்,அவர்படம் பெற,சுட்டிங் பார்க்க: Amma Commns, 5.Sundaram Bldgs 47.Arcode rd,Kodampakkam,Madras 600 024,India Tel. 009144.4847191

**கனடாவின் நம்நாடு பத்திரிகை:**

கனடாவிலிருந்து நண்பர் தீவகம் வே. இராஜலிங்கம்,அவர்களை பிரதம ஆசிரியராகக்கொண்டு நம்நாடு பத்திரிகை பலஆண்டுகளாக வெளிவருகிறது.பல்சுவைஅம்சங்கள்,பரபரப்பானசெய்திகள் எனதுாள்கிளப்புகிறார்!போங்கள்!சபாஸ் Namnaadhu inc,pb.45536,747Donmil-ls Rd,DonmillsON.M3C.3S4,Canada

**வெண்ணிலவுஇதழ்-நியுசிலாந்து:**

இனுவை தி.திருநந்தகுமாரை ஆசிரியராகக்கொண்டு வெண்ணிலவு எனும் தேனிலவு, நியுசிலாந்திலிருந்து வருகிறது.40பக்கங்களில் கலரில் மிகமிக அருமையாகவே நண்பர் வெளியிடுகிறார்.நியுசிலாந்து தமிழரை உலகுக்கு அறிமுகம் செய்யும் இவ்விதழ் தொடர்ந்துவரச்செய்தல்,தமிழர்,கடமையன்றோ யாழ்.இந்துக்கல்லூரி,கம்பன்கழகம்,தமிழ்இணையம்,ஒக்லாந்து என நந்தனின் தமிழ்,தமிழர்ஆளுமை தொடரட்டும்!!!

**வள்ளலார்ஆன்மநேய 2.மாநாடு:**

மலாயா பல்கலைக்கழகத்தில் 22-23 ஏப்ரலில் ஆன்மநேயமாநாடு நடக்கும். Vallalar consultant,121Jalan PJS 4/4, Tmn.medanPetaling Jaya,46000 Selangor Malaysia.Tel.03.778114110

**சிறப்புநூல்கள்:** திருகோணாசல-வைபவம்-அகிலேசபிள்ளை,மண்வாசனை-நோர்வேதமிழ்சங்கம்,பாரதியார்வீ.செல்வராஜ்

**Redaksjonen/ Koordinatorer:**

*Norge:* T.Thileepan, Viji Siva/Oslo,M.Mahan/Bergen,Devi/Trondheim,K.Sivarajah/Tromsø,Mubarak Ali /Stavanger,M.Bastian/Kristiansand,M.S.Uthayamoorthy/Flekkefjord,Pon.Siva/Egersund,Ravi/Vardø, Kumar/Ålesund, J.T.Ravindran/Kiberg, Sureshkaran/Båtsfjord, Thavam/Brattvåg, Thevarajah/Kristiansund



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைவளர் மணி

## நேர்முகம் தந்தவர் செல்வி சைலஜா
## நேர்முகம் கண்டவர் கவிஞர் இரா. இரவி



1. *நாட்டியக் கலையை நீங்கள் யாரிடம் பயின்றீர்கள்?*
நாட்டிய கலையில் மிகவும் ஆர்வம் இருந்தபடியால் என் தாயாரிடமே முதன் முதலில் பயின்றேன். பின்பு குரு ஜெயராமன், ராசலெட்சுமி, கிருஷ்ணகுமாரி இவர்களிடம் பந்தநல்லூர், வழுவூரார் முதலிய பாணிகளை கற்றுக் கொண்டேன்.

2. *நாட்டியத்தின் மீது ஈடுபாடு ஏற்பட என்ன காரணம்?*
என் குடும்பத்தார் அனைவருக்கும் கலையில் ஆர்வம், அத்துடன் குழந்தை பருவம் முதல் பரத நாட்டியத்தில் ஈடுபாடு அதிகம்.

3. *நீங்கள் இது வரை எத்தனை நபர்களுக்கு பயிற்சி தந்து இருக்கிறீர்கள்?*
என்னிடம் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண், பெண் இருபாலர்க்கும் நாட்டியம் சொல்லிக் கொடுத்தேன். அதில் 75 பேருக்கு அரங்கேற்றம் நடத்தியுள்ளேன்.

4. *உங்களுடைய நடன நிகழ்ச்சியின் போது மறக்க முடியாத சம்பவம் ஏதும் நிகழ்ந்ததுண்டா?*
என் நடன நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு ஆர்வத்தினால் அவரே மேடையில் ஏறி பரத நாட்டியமாடினார். இவை போல பல நிகழ்ச்சிகளில் நடந்துள்ளது.

5. *இந்த துறையில் நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன?*
பிரதமும் ஒரு கலை தான் அனைவரும கற்றுக் கொண்டு பாரத நாட்டின் பெருமையை காப்பாற்ற வேண்டும். நம் கோயில் சிற்பங்களில் கலைகளின் பாரம்பரியம் நன்கு புலப்படும். நடனம், நாட்டியம் என்பது கலை அதை வெளிப்படுத்துவது நல்லது. ஏழை, பணக்காரன் என்ற பாரபட்சம் இல்லாது இக்கலை அனைவருக்கும் போய் சேர வேண்டும். பாமரரும் புரிந்து கொள்வது பரத கலை. பொதுவாகவே நாட்டியம் நடித்து காண்பிப்பது எல்லோருக்கும் எளிதாக புரிந்து விடுகிறது. இந்த பாவனைகளைத்தான் உலகலாவிய பாஷை (Universal Language) என்று கூறுகின்றனர். நமது இலக்கியங்களில் சிறந்த பல இருந்தும் பலருக்கு தெரியாமல் உள்ளது. அது போன்றவைகளை நாட்டிய நாடகங்களாக்கி மக்களுக்கு அளிப்பதே எனது விருப்பம். அதனிலே பல நாட்டிய நாடகங்கள் செய்து ஓர் சாதனை படைக்க விரும்புகிறேன்.

6. *உங்களுடைய தொலைக்காட்சித் தொடர் அனுபவம் பற்றி . . .*
இன்றைய உலகில் மக்களுக்கு தெளிவாக, விரிவாக நல்லவற்றை எடுத்து கூறுவது தொலைக்காட்சியாகும். நாடகம், நாட்டியம், கவிதைப் போட்டிகள், பாட்டுப் போட்டிகள், கல்வியில் ஆய்வு கேள்விகள் இன்னும் பல அறிய நிகழ்ச்சிகளை மக்களுக்கு தொலைக்காட்சி தொடர் அளிக்கிறது. இதில் பல முறை பங்கேற்றுள்ளேன்.

7. *பெண்ணுரிமை பற்றி உங்கள் கருத்து என்ன?*
பெண்களை தெய்வமாக போற்றும் நாடு பாரத நாடு. கல்வி, செல்வம், வீரம் என்று எல்லாவற்றிற்கும் தலைவியாக பெண் தெய்வங்களே உள்ளது. இருந்தும் சில கால கட்டங்களில் பெண்களாலேயே, பெண்களுக்கு கொடுமை இழைக்கப்படுகிறது. இதை கொண்டே பெண்களுக்கு முழு உரிமை அளிக்கப்படவில்லை என்று கூறுவது ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும். இன்று கிராமப்புறங்களில் பெண்களே சுயமாக சம்பாதித்து குடும்பத்தை வழி நடத்துகின்றனர். மேலை நாடுகளில் இருக்கும் பெண்களை விட இந்தியாவில் உள்ள பெண்களுக்கு உரிமை அதிகமாக்த்தான் உள்ளது. இருந்தாலும் அதை பெற பகுத்தறிவும், படிப்பறிவும் அவசியமான ஒன்றாகும்.

8. *சாதி மத சண்டைகள் ஒழிய தாங்கள் கூறும் தீர்வு என்ன?*
ஆதிமனிதன் "எந்திணை" படைத்தான். அதைத் தொடர்ந்து வந்தது சாதி, மதம் என்பது. எல்லோரும் "ஓர் இனம் எல்லோரும் ஓர் மதம்" என்ற நிலை வரவேண்டும் மக்களிடையே சமத்துவம் வரவேண்டும். பழிவாங்கும் நோக்கம், வெறி இவற்றை மனிதன் விடவேண்டும்.

9. *மூடநம்பிக்கைக்கு பலியாகும் பெண்கள் பற்றி?*
மூடநம்பிக்கைகளுக்கு பலியாகும் பெண்கள் பற்றி அவர்களது அறியாமை எனலாம்.

10. *இலங்கைத் தமிழர் இன்னல் தீர நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?*
இலங்கை தமிழர் இன்னல் தீர விடுதலைப்புலிகளும், இலங்கை அரசாங்கமும் சுமூகமான முறையில் பேசித் தீர்க்கலாம் என்பது என் கருத்து.

*நேர்முகம் தந்தவர்*

**செல்வி சைலஜா திருமலை**

61, பாரதி நகர், கிழக்கு தெரு,
கிருஷ்ணாபுரம் காலனி,
மதுரை - 625 014.
போன் : 642348

*நேர்முகம் கண்டவர்*

**கவிஞர் இரா. இரவி**

5-எ, இருளப்பகோனார் சந்து,
வடக்கு மாசி வீதி, மதுரை-625 001.
தமிழ்நாடு.
போன் : 631505.



Purusothamarajan/Gaupne,M.Manivannan/Drammen,K.Ramachandran,B.Raja/Fredrikstad,Sumathy/Nordfjoreid S.Mani/Tønsberg, Sarvendran/Stryn, Veeragathi/Frei,P.Maheswaran/Alta,Ravindradevi/Batsfjørora,K.Kalanithi /Skodje,Ponnuthurai/Ålesund,Sivarajah, Vasanthan/Skårer,Kanagasingam/Kalvåg,,S.K.Rajah/Hammerfest,Gajen dran/Gol,Manoharan,Baheerathan/Sørvær,Kiruba,Sothi/Ås,S.Ehamparam/Harstad,Jeevan/Levanger,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சர்வதேசதமிழர் கவியரங்கு:**

**தர்மயுத்தம் தொடுத்த குமார்!**

பொட்டுவைத்த முகங்கொண்ட
பொன்னம்பலம் பெயர்கேட்டால்
சட்டமன்றே செவிமடுக்கும்!
சிந்துமவர் சொல்கேட்க!!
எட்டுத்திக்கும் அவர்புகழும்
எல்லையின்றிப் பரந்துதுடன்
சட்டக்கலை பயிலுனர்க்கே
சமர்ப்பணமாய்,சார்ந்துநின்றார்!
பேச்சுவன்மைப் பலங்கொண்ட
பொன்னம்பலம் பெற்றெடுத்த
வீச்சுத்தமிழ் வீரரென
வந்துதித்தார் குமாரரவர்!
தந்தைவழி கல்வியினை
தாங்கிநின்றார் திறமையுடன்
சிந்தையிலே தமிழன்பும்
சேர்த்துநின்றார்,வலிமையுடன்!
சொத்துசுகம் பலவுண்டு
சொந்தபந்தம் வெளிநாட்டில்
சித்தம்அவர் லயித்திருந்தால்
சொகுசுவாழ்க்கை மேல்நாட்டில்!
தான்பிறந்த மண்ணுக்கே
தன்வாழ்வைக்கொடுத்தவரில்
நானென்ற அகந்தையின்றி
நாயகனாய் அவர்வாழ்ந்தார்!
தமிழ்கட்சி சகலதுமே
தாளமிட அரசுக்கு
தமிழன்தான் நானென்று
தர்மயுத்தம் தொடுத்தவரே!
விடுதலையை வென்றெடுக்கும்
வேங்கைகளின் வீரமதை
அடுக்கிவைத்தார் அழகாக
அம்மையாரின் அரசுக்கு!
முகம்கொடுத்து அவருடனே
மோதஅஞ்சும் முடவர்கள்
களங்கமுடன் காரியத்தை
கச்சிதமாய் தீட்டிவிட்டார்!
வலைக்களத்தில் அவர்வரவை
வஞ்சகர்கள் வரவழைத்து
கொலைக்களத்தில் முடித்திட்டார்!
கோழைகளாம் பாதகர்கள்!!
தம்பியவன் துயரத்தை
தமிழரிடை தணிக்குமுன்பே
விம்மியழ வைத்துவிட்டார்!
வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சி!!
குரல்கொடுக்கும் தமிழரெலாம்
கூட்டாக நின்றிருந்தால்
விரல்விட்டே எண்ணிடலாம்!
விடுதலையின் நாட்களதை!!
உம்போன்று யாரொருவர்
உரக்கஇனி முழங்கிடுவர்?
எம்போன்ற புலவனுக்கும்
ஏனிந்த வேலை வைத்தீர்?
மண்ணுலகில் மறைந்தாலும்
மன்னவனே உன்பெருமை
விண்ணுலகம் முழுவதுமே
வீறுநடை போடுமய்யா!
(உலகம்போற்றும் அந்த உத்தமனின்
உருக்கத்தை,உலகெங்கும்பரவிநிற்கும்
சர்வதேசதமிழர்,மூலம்உலகறியசெய்க!

**வல்வை பா. தங்கத்தமிழன்,**
M.T.Berdose,Pb.6471,Jeddah,K.S.A.

**தமிழின் அழகே தனியழகு!**

பல்லவி:
தமிழின்அழகே தனியழகு-அது
தந்திடும் சிறப்போ மிகப்பெரிது! (தமி)

அனுபல்லவி:
தமிழன்இல்லாத நாடுஎது? - இங்கு
தமிழர்க்கு என்றொரு நாடுதேடு!

சரணம்:
இன்றொருபுதுயுகம் தோன்றியது-இங்கு
இணையில்லா வீரம்விளை யாடியது!
தென்றலில் செந்தமிழ்கலந்தது-எங்கள்
இதயத்தில் தமிழீழம் உதித்தது!

பாடுக மனமே! பாடுக மனமே!!
தமிழ்வீரம்! தமிழ்வீரம்!!
நாடுக மனமே! நாடுக மனமே!!
தமிழ்மானம்! தமிழ் மானம்!! (தமி)

வீணையின்நாதம் கேட்கிறது-தமிழ்
ஈழத்தின்தாகம் ஒலிக்கிறது!
வீரத்தின்விளைநிலம்,வெல்கிறது-உயர்
தாகத்தின்,மீட்புப்போரில் கலந்தது!
(பாடுக)

**இயற்றியவர்:திருமலைச்சந்திரன்**
**பாடியவர்:பிரியா-புதுக்குடியிருப்பு**

**சர்வதேசதமிழர் இதழ் வாழ்க!**

தமிழ்மணம் கமழும்,புகழ்மிகு இதழாம்
நிகழ்ந்தன,நிகழ்வன,திகழ்வனவும்-மதி
உமிழ்உலகெலாம்,முத்தமிழ்வளர்க்கும்
தமிழ்இதழாம், தமிழர் தொன்மையை
இமிழ்வுடன்கொட்டி,மனம்நெகிழச்செய்யும்
தமிழ்த்திருமுரசாம்,மகிழ்ச்சிகள்மிளிரும்
தமிழ்மணமலரே,கழிவற,களிதருமிதழே!
இகழ்வறப்பரவிபுகழ்பலதாங்க-சர்வதேச
தமிழர் இதழினை வாழ்த்துகிறேனே!

**செ.நாகேந்திரன்-லண்டன் கி.12**

**பொங்கலோ பொங்கல்...!**

எங்கள் தமிழர் வாழ்வும் உயர
என்றும் வருமே பொங்கல்!
தங்கத்தமிழும்,பொங்கல்சோறும்
தமிழர்வாழ்வை உயர்த்தும்!
மங்காப்புகழும் மனிதநேசமும்
மாண்புடன் பெறுவர் தமிழர்
பங்கம்வராது தமிழர்கலைகள்
பாரில் உயரும்!சிறக்கும்!!

உழவுத்தொழிலே உணவும்தந்து
உலகைஉயர்த்தும்!வாழ்விக்கும்!!
பழகும் தமிழில் கவிதையும்பிறந்து
கானம் பிறக்கும் உலகில்!
மழையும்,சூரியன்ஒளியும்,மண்ணும்
பழங்கள்,தானியம்,காய்கறிதந்தும்
களை களைந்து,விளைச்சலும்பொங்க
களிப்பாய் மனிதர் உண்டுமகிழ்வோம்!

**என்.எஸ்.பிரபு - நோர்வே**

**நடுவீட்டு கலாசாரச்சீரழிவுகள்..!**

அந்நியர் வருகையை வீட்டுக்குள்
அனுமதிப்பதில்லை நாய்!
கால்வயிறு உணவு உண்டாலும்
தனியாக உண்பதில்லை காகம்!
முடி ஒன்று உதிர்ந்தாலும்
மடிந்துவிடும் கவரிமான்!
அறுவடைநேரத்தில் சேமித்தும்
மழைகாலத்தில்,எடுத்துண்ணும்எறும்பு!
பச்சைத்தண்ணீராய் பருகினாலும்
பாலாக்கி தந்திடும் பசு!
குளிர்பானங்களில்,தொலைகாட்சிகளில்
அந்நியர்வருகையை,ஆனந்திக்கிறநீவிர்
நாளை,நடுவீட்டுக்குள் நிகழப்போகிற
கலாசாரச்சீரழிவுகளை ஒருகணமேனும்
இனியாவது எண்ணிப்பாருங்கள்!

**கே.அம்பிகாபதி.பா.ஜனதாகட்சி**

**அமைதி,ஆனந்தம் வேண்டும்!**

எல்லா ஏழைகளும் ஏற்றம் பெறுக!
எழுச்சிமிக்க வாழ்வினைப் பெறுக!
பாரினில் பஞ்சம்,யுத்தம் ஒழிக!
பயிர்கள் வளர்க! களைகள் ஒழிக!
மாதம் மும்மாரி மழையும் பொழிக!
மதவெறி,மொழிவெறி,பதவிவெறிஒழிக!
அமைதி,ஆனந்தம்,ஓங்கிநிலைத்திடுக!

**ராம் பாஸ்கர்-முகுந்தனூர்**

**எங்கும் காவல்!எதிலும் காவல்!**

கிளியாகப் பறந்து கிளித்தட்டுஆடி
மானாகக் குதித்து மாங்கொட்டைஆடி
பறந்தஎனக்கு வந்ததே ஒரு சிறை!
மொட்டாகஇருந்தநான்,பூவாகவந்ததால்
எங்கும் காவல்!எதிலும் காவல்!!
பள்ளிசெல்ல அண்ணன் காவல்!
பாட்டியோ வீட்டில் காவல்!
மாமியோ திருவிழாவில் காவல்!!
இத்தனை காவலையும் தாண்டி ஒரு
இளைஞன் எனைத்தொடர்ந்தான்!
திரைநாயகனை,மனதில்பூட்டிய,எனக்கு
நிஜநாயகன் பார்வை,இதயம்தொட்டது!
அவன்எனை,சுழட்டிவிட்டதாககூறினான்
நான்தான்,அவனிடம் சுழண்டுவிட்டேன்!
யார் சுழண்டு என்ன பயன்?
என் படமோ கந்தையா தரகரிடம்
என் நாயகனோ காவாலியாம்!
தரகரின் ஆள் எஞ்சினியராம்!
தாராளமான சம்பளமுமாம்!
கத்தரி வெருளியைக் கண்ட
காகம்போல் பறக்க நினைக்கிறேன்!
முடியவில்லை! நியாயம்கேட்டால்
காதல் வேறாம்! வாழ்க்கை வேறாம்!!
அப்படியானால்,எதற்கையா முதலிரவு?

**சிந்தனைச்சிற்பி - நோர்வே**

**நீ எனைக் கொஞ்சு....!**

என்நிறம் மஞ்சு, நீயின்றி என்நெஞ்சு
உடைந்ததுஅஞ்சு,உன்னங்கமோபஞ்சு
அதிலென்ன குஞ்சு என்னுயிர் பிஞ்சு
உனைக்கண்டுதொஞ்சு,மறவாதேதஞ்சு
என்னெஞ்சில்எஞ்சு,நழுவும் விஞ்சு
நீயெனைக்கொஞ்சு,அதற்கேன்நஞ்சு?
உன்னுடை கஞ்சு,உன்மனமோபொஞ்சு
ஆளைவிடு உஞ்சு,அப்பாடா கெஞ்சு!

**வவுனியா.நடா.நகுலன்.நோர்வே**

**என் கற்பனைகள் ஊறட்டும்!**

கருங்குயிலின்கவி,கன்னலாயினித்தது
உருவத்தில்கருமை,பருவத்தில்இளமை
நீஅழகிலைதான்,இசையோ இனியபலா
மாதுளங்கனிசுவை!போதும்,பூங்குயிலே
எனக்கு பா கற்றுத்தா! என் கவியில்
கற்பனை தடைப்படுகிறது!-அந்தத்
தடைக்கல்லை உடைத்திடு!
உன்மோனகீத இசை!என்கற்பனைகள்
அதிலேஊறட்டும்!என்னிதயபூங்குயிலே

**சு.இலக்குமணசுவாமி-மதுரை.6**

**கலியுகக்கண்ணகிகள்....!**

ஐவரின் மனைவி,
தர்மபத்தினி திரௌபதை!
ஓர் கணம், அவள் மனம்,
அருச்சுனனை,அர்ச்சனைசெய்து
ஆராதித்தது....!
நகர்ந்தது நரகம்,பிறந்தாள் ஒருதரம்!
இக்கலியுகக் கண்ணகிகள்
பிறப்பார் அங்கே எத்தனை தரம்...???

**தி.திலீபன்-ஒஸ்லோ**

**ஓ...சூரியனே....!**

தண்ணீரை ஏன்
சுட்டெரிக்கின்றாய்?
மேகமாக உன்னருகே
இருந்தவள்,
மழையாக மாறிப்
பூமிக்கு வந்ததால்
கோபமா?

**இரா.இரவி-மதுரை.1**

***Finland:*** R.Sivalingam,Sivaruban ***Sweden:*** Nantan ***Denmark:*** Velanai ponanna,V.K.Paramanathan,S.Yogendran
***England:*** Nagendran,N.Balamurali,S.Kanagasundaram,T.Manoharan,Yoges.J.Raji C.,Aranga.Murugian/London
***France:*** Prof.Sakthipuyal,Patkunarajah,Satchitanandan ***Germany:*** Poopati,T.Buvanendran ***Swiss:*** Jeyakanthan.V

www.tamilarangam.net

**சர்வதேசதமிழர் கவியரங்கு:**

**ஈராயிரமாண்டு இன்பமாய் வருக!**

ஈராயிரமாண்டு,இன்பமா பொங்கிவரும்?
வாராததெல்லாம் வந்துவிடும்-தீராத
சிக்கல்களத்தனையும்,தீர்ந்தாமறையும்
மிக்கநலம் பொங்குமா மேல்?

எப்பொங்கலும் போலே எம்முன் எழும்
இப்பொங்கலும்வந்துபோகும்-தப்பாமல்
பொங்கவேதான்செயும்,புலம்பெயருளம்
எங்கெங்கும் இப்பொங்கலே!

பொங்க!பொங்க,பொழுதின்விடிவில்லை
பொங்குவோமின்னும்,புதிதாக-பொங்கல்
அத்தனைக்கும் ஒருநாளில் முடிவுண்டு
புத்தமுது உண்பொழுதே அது!

வெளுக்கும்நிலை, விரிவாய்தெரிகிறது
பழுக்கும்கதிர்,தோன்றப் பார்க்கிறது!
விழுக்காடுகூடுவதால்,துயர்குறைகிறது
நாடுவதே நமக்கு நலம்!

**தாமரைத்தீவான்-திருமலை**

**தமிழீழ நாட்டுப்பண்!**

தாளக்கடல் தனில் முழங்கும்
தமிழ்ஈழப்பொன்னணங்கே!
காலக்கடல் முன்தோன்றிக்
கதிர்முத்தைக் கண்டவளே!
கான்,ஆறு வளம்பெருக்க
காந்தள் மலர் மணம்பரப்பத்
தேன்பாடும் மீன்பாடும்
தெங்கு,பனை,நெல்,வளமும்
மகாவலி புழ்கங்கையிலே
மாணிக்கம் விளைப்பவளே
புகார்த்தமிழன் மண்ணைப்போல்
பொருள்கொழிக்கும் மலையகமே!
நிகரில்லா நெஞ்சுரத்தால்
நிலைத்த யாழ் தமிழணங்கே!-உன்
புகழ்வளர்க்கும் திறம்வியந்து
புவிபோற்ற வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!! வாழ்த்துதுமே!!!

**உணர்ச்சிக்கவிஞர்.சிங்காரவேலன்**

**என்ன தமிழன் நீயோ....?**

என்ன தமிழன் நீயோ?
இரும்பு உனக்கு வாயோ?
இனிக்கும் தமிழை விட்டு
எதையெதையோ தொட்டு
பிதற்றி நிற்பாய் பித்தா!
பேதமை உனக்குச் சொத்தா?
உனதுமொழியின் உயர்வை
உனது இனத்தின் அயர்வை
அறியாமலா கலைவாய்?
அறிவுகெட்டா அலைவாய்?
நாடும் மொழியும் வாழ
நன்மையெல்லாம் சூழ
பாடுபடக் கற்பாய்
பாடுபட்டு நிற்பாய்
இல்லையானால் போ!போ!
இடுகாட்டுப் பக்கமே போ போ!
சுடுகாடு உன்னை தோழனாய் ஏற்கும்!

**முனைவர்.தமிழப்பன்-சென்னை**

**துணிவாய் நீயும் நடைபோடு!**

என்னுயிர் நண்பா! நீ உரைப்பாய்
எம்மண்ணில்,மாய்ந்திட்ட மலர்களினை
கண்ணில் தெரிவது கரும்புலிகள்
கடலில்தெரிவது எம்படையணிகள்
உயிரை துச்சமாய் மதித்தவரை
உணருதல்,மதித்தல் அவசியமே
பாசத்தை மண்ணில் பரவவிட்டு
பறந்துசென்ற எம் தோழர்களே!
நாளையின் சரித்திரம் நீங்களென்று
நம்பிக்கையுடனே நாங்கள் இன்று!
மரணமென்பதை மறந்துவிட்டு
மலரும் ஈழத்தை மனதில்வைத்து
துணிவாய் நீயும் நடைபோடு!
துன்பம் இல்லை உன்அருகோடு!!

**சி.சிவனேஸ்வரன்-ஒஸ்லோ**

**உரிமைக்குரலே நம்குரல்....!**

பொறுத்திடவேண்டாம் போராடு!
பொங்கும்குருதியில் நீராடு!!
மறுத்திடும் உரிமைகள் வரவேண்டும்!
மானிலம் நற்பயன் பெறவேண்டும்!!

மானிடஉரிமைகள் சிதைந்திட்டால்
மண்ணில் அவைகள் புதைந்திட்டால்
வீணல்லவா நாம் வாழ்வதுவும்
வீறுடன் போ வழிபிறக்கும்!

தாழ்ந்தவர் தலைகள் நிமிரட்டும்!
தக்கநல் மாற்றம் நிகழட்டும்!!
வாழ்விழந்தோர் நிலைமாறட்டும்!
வரலாறு இதைக்கூறட்டும்!!

வெட்டி நிலத்தை நன்குழுது
விளைவை யார்யார்க் கோ அழுது
பட்டினி கிடக்கும் நம்கூட்டம்!
பலனைப்பெறவே போராட்டம்!!

உரிமைகளுக்குப் போராடும்
உணர்வே நம்மை இனங்காட்டும்!
உரிமைக்குரலே நம்குரலாம்!
ஒன்றுபடின்அதை நாம்பெறலாம்!!

**டாக்டர்.இளங்கம்பன்-பழனி**

**உலகத்தை உற்றுப்பார்...!**

கலைமகள் ஆணையிட்டாள்!
கவிதை ஒன்று புனையும்படி
கண்ணிருந்தும் குருடனான
என்னிடமா?எனக் கேட்டேன்!
உண்மைஎனும் கண்கொண்டு
உற்றுப்பார் உலகை என்றாள்!
உணர்ச்சியினால் எனைமறந்து
ஊமையாய் இருந்துவிட்டேன்!
உலகமென்று நான்சொன்ன
உவமைதான் உள்ளமடா!
உணர்வுக்கு அப்பால் ஒளிந்துள்ளே
உறைந்துகிடப்பதுதான்,உலகென்றாள்!
உள்ளும்,புறமும் ஒருதன்மைக்காட்சி
சொல்லும் தரமே பொருளென்றாள்
வெள்ளைநிறத்தை அவள்விரும்பி
பிள்ளைமனத்தோடிருப்பததுவென்றாள்

**ஆரையம்பதி.க.சபாரத்தினம்**

**ஆசைத்தீ அடங்காது...!**

காலைசுற்றியபாம்பு,கடிக்காமல்விடாது
ஆளைசுற்றியஆசை,அடங்காமல்ஓயாது
தேளையொத்த, கொடுநீல விடஆசை
மூளைச்சுரமாக்கும்,மனிதன்வெறியாசை
மூலைக்குமூலை மண்மீது ஆசை
சேலைக்குசேலை சுகந்தேடஆசை
பொழுதுக்குபொழுது,போதைமேலாசை
நாளுக்குநாள் வட்டிமேல் ஆசை

கோழைத்தனமாக பணம்சேர்க்கஆசை
ஏழையின்வாழ்வில் விளையாடஆசை
நூலைக்கயிறாக்கி புகழ்தேடஆசை
நாளைக்குஉலகை ஆள்ந்துவிடஆசை

விரலுக்குவிரலெலாம்,பொன்போடஆசை
கழுத்துக்கு தங்கமலை,சாத்திடஆசை
பலகோடிஆசைதினம்,ஆடுதுபார்மனதில்
அத்தனையும்,அடங்கும் மண்ணுள்ளே!

**வ.வதனகோபாலன் - ஒஸ்லோ**

**கடவுள் எங்கே.....?**

கடவுள் இருக்குமிடம்
காடெல்லாம் தேடாதே!
கடவுள் உந்தனது
உள்ளத்தில்தான் உள்ளார்
காலை மாலை இருவேளை
கடவுளைதான் நினைத்து
கைதொழுதால் கடவுள்
உனைநாடி ஓடிவருவார்!
உருவங்கள் கடவுளுக்கு
ஒருபோதும் கிடையாது!
உருவாக்கப்பட்டது தான்
உருவங்கள் எல்லாம்!
உள்ளுணர்வை கடந்தவன்
கடவுள் ஆவார்
உள்ளத்தில் அவனை
நினைந்தே வாழ்வாய்!!

**கவிஞர். முகதா - முகுந்தனூர்**

**2000ல் புதியஉலகு காண்போம்!**

2000ல் எல்லோர்க்கும் வேலை!
2000ல் எல்லோர்க்கும் கல்வி!
2000ல் எல்லோர்க்கும் வீடு!
2000ல் எல்லோர்க்கும் நல்வாழ்வு!

இதுவே நம்நோக்கம் உலகெங்கும்
அதுவேண்டி உழைப்போம் எந்நாளும்!
புதுவேகம் காணப்புதுவருடம் வருமே!
எதுவேண்டும்என்றால்,ஊக்கமேஎன்றும்!

சனநாயகம் வெல்ல நாமும்
தனநாயகம் வெல்லவேண்டும்!
தனிநாயகமின்றி ஒற்றுமைக்
கனிநாயகம் பிறக்கவேண்டும்!

கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு
உடமையாய் காப்போம்!என்றும்
மடமை நீக்கிய புதியஉலகை
திடமாய்க் காண்போம் என்றும்!

**என்.ஆர்.இலட்சுமணன், கைதராபாத்**

**குருவிகளே! குருவிகளே....!**

குருவிகளே!குருவிகளே
பறந்துசெல்லுங்கள்!-எங்கள்
குறைகளை குவலயத்துக்கு
எடுத்துச் சொல்லுங்கள்!
குண்டுமாரி பொழிவதைக்
கூறச்சொல்லுங்கள்!
குடிகளெல்லாம் எரிகின்றதை
எடுத்துச்சொல்லுங்கள்!
பட்டினியால் வாடுவதை
பறந்து சொல்லுங்கள்!
பாவியர் படை அக்கிரமம்
கூறச் சொல்லுங்கள்!
வீரத்தமிழர் படையினிலே
சேரச் சொல்லுங்கள்!
வீறுநடை போட்டு எம்மை
காக்கச்சொல்லுங்கள்!

**தீவான்.மணிபல்லவன்-பாங்கொக்**

**சந்தோசங்கள் செத்துப்போய்..!**

தோழி! செத்துப்போய் சமாதியானது
நம் சந்தோசங்கள்!
விதியின் சதுரங்கத்துள் உயிரடங்கிப்
போனது நம் பாசம்!
அழுதுபுலம்பிய என்விழிகள்,
உப்பளங்களை உருவாக்கிவிட்டன!
உவர்க்கண்ணீரால்!
நீ அழுகின்ற ஆத்மசப்தங்கள்
நிசப்தப்பொழுதுகளை கிழிக்கின்றது!
என் கற்பனை வீதிகளில் மௌனமாய்
இவைதான் என் பாசை....இப்போது!

**செல்வி.எம்.பவி-ட்றம்மன்**

*Malaysia:*K.Kanesan,Arun,V.Selvaraj/Kualalumpur,Rev.V.Devarajulu/Penang,*Thailand:*V.Nagarajah,Jegadees
*Singapore:*Krishnan ,Selvajothy *Indonesia:*Santhrasekaran/ Medan, Mrs.Mani/ Jakartha,
*Canada:*S.Senthilathan,Mrs.Kanageswari N.,S.Thiru,M.Mahindan *Newzealand:*T.Thirunanthakumar,Baskaran



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கப்பூரிலிருந்து ஒரு கடிதம்....!

BLOCK : 134 :-12-157
YISHUN STREET : 11
SINGAPORE : 760134

Jeysakthivel/Erode,Ram Baskar/Mukundanur,Pugalenthi/Maisoor,Dr.Ilamkamban/Palani,S.G.Z. Khan/Tirupur
Vijayakumar/Putukottai, Ambikapaty/BJP, P.Arunagirinathan/MDMK, R.Ravi/Madurai,Kumar/DMK,Raj/TMC
Veera.Madurakavi/Puthucheri,Rasamanikkam/Salem,P.Sathyanarayanan/Calcutta,Sundaresan,Ramanujam/Delhi
Prof.S.Ramamurty,AS.Visvanathan/Bangalore,Sam David/Velur,P.V.Tamilanpan/Kovai,Dr.Lokambal.S./Kerala

## ஒளி வெள்ளத்தில் சிராங்கூன் ரோடு

கிருஷ்ணன்
சிங்கப்பூர்.

மனிதவள அமைச்சர் டாக்டர் லீ பூன் யாங் அதிகாரப்பூர்வமாக மின்னியல் விளக்கை ஏற்றிவைக்க, வண்ணமத்தாப்பு வெடிகள் மேடையிலும் அலங்காரக் கொட்டகையின்கீழும் வெடித்துச் சிதறி சிறப்பு விருந்தினர்களின் முகத்திலும் கூடி நின்று வேடிக்கைபார்த்தோரின் முகத்திலும் மகிழ்ச்சிக்களிப்பைப் படரவிட்டன.

அதேவேளையில் சிராங்கூன் சாலையும், அதனை அடுத்து இருக்கும் 5 சிறுவீதிகளும் ஒளி வெள்ளத்தில் மூழ்கின. அவ்வட்டாரத்தின் தேவலோகச் சூழல் நவம்பர் 14ம் தேதி வரை நீடித்திருக்கும்.

பயணிகள் எவ்விதத் தங்குதடையின்றி வந்து செல்லும் இடங்களில் பிரபலமான இடங்களில் ஒன்றான சிராங்கூன் சாலை உள்ளூர் மக்களையும் பயணிகளையும் ஈர்க்கும்.

சிராங்கூன் சாலையில் அமைந்துள்ள இரு வண்ண வளையங்களில் உள்ள இரு கரங்கள் அங்கு வருவோரைக் கைகூப்பி அழைக்கின்றன. அதைப்போலவே 5 வீதிகளில் உள்ள சிறு வளைவுகளில் எழுதப்பட்டுள்ள இனிய தீபாவளி எனும் இருமொழி வாசகங்கள் அனைவரையும் வரவேற்கின்றன.

### *விழாக்கிராமம்*

ஒளியூட்டு மட்டும் மக்களைக் கவர்ந்து இழுக்காது. அக்டோபர் 17ம் தேதியிலிருந்து நவம்பர் 6ம் தேதி வரை கேம்பல் லேனில் அமைக்கப்பட்டிருக்கும் விழாக்கிராமம் உங்களுக்கு நல்ல விருந்தாக அமையும். போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ள அந்த வீதி விழாக்கோலம் பூண்டுள்ளது. இந்தியக் கலாசாரத்தின் சிறந்த அம்சங்களை அங்கு காணலாம். தள்ளுவண்டிகளில் ஆடைகள், அலங்காரப்பொருட்கள், உணவு, ஓவியங்கள்,சிலைகள், கைவினைப்பொருட்கள்(handicrafts) மசாலா, கம்பளங்கள் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் விற்பனையும் செய்யப்படும். இவை அனைத்தும் தீபாவளிக்கு உங்களைத் தயாராக்கும் பொருட்கள் தானே?

கேம்பல் லேன் விளக்குகளும் விழாக்கோலமும், உள்ளூர் வெளியூர் கலைஞர்களின் தென் இந்திய வட இந்திய கலை நிகழச்சிகளுக்கு நல்ல பின்னணியாக அமையும். ஞாயிற்றுக்கிழமை தவிர தீபாவளி முன்தினம் வரை அங்கு நடைபெறும் கலைநிகழச்சிகள் பலரையும் ஈர்க்கும்.

சிறந்த வகையில் அலங்காரம் செய்யப்பட்ட கடை என ஜோதி புஷ்பக்கடைத் தெரிவுசெய்யப்பட்டது. அது விற்கும் பொருட்களுக்கு ஏற்ப அலங்காரம் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததால் அப்பரிசு அதற்கு கொடுக்கப்பட்டது. அலங்கார விளக்குகளைப் பார்க்கவும், பொருட்களை வாங்கவும் மட்டும் நீங்கள் சிராங்கூன் சாலைக்குச் செல்ல வேண்டியதில்லை. லிட்டில் இந்தியா ஆர்கேடில் இருக்கும் லிட்டில் இந்திய கலாசார மையத்தில் இந்திய பண்பாட்டை அறிந்துகொள்ளவும் சென்று வரலாம்.
சமய உணர்வு உள்ளவர்கள் அருள்மிகு மாரியம்மன் ஆலய தீமிதி விழா தொடர்பாக வெள்ளி ரதத்தில் பவனி வரும் திரௌபதி அம்மனை நவம்பர் 1ம் தேதி கேம்பல் லேனில் தரிசிக்கலாம்.
ஒவ்வொருவருக்கும் எல்லாவற்றிலும் ஒன்றைத் தரும் தீபாவளி ஒளியூட்டுவிழா ஆண்டு தோறும் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

### *சிங்கப்பூர் வரலாற்றுக் கவிதை தமிழிலும் சேர்த்து நான்கு மொழிகளில்*

சிங்கப்பூர் வரலாற்றை சித்திரிக்கும் கவிதைகள் அடங்கிய நினைவுகளும் ஆசைகளும் (Memories and Desires) எனும் புத்தகம் வெள்ளிக்கிழமை (அக்டோபர் 15) வெளியிடப்பட்டது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் யூனிபிரஸ் கலை நிலையம் இந்த நூலின் வெளியீட்டிற்கு ஏற்பாடு செய்தது. பல்கலைக்கழகத்தில் கலை வளர்ச்சிக்குப் பங்காற்றிய துணைவேந்தர்(vice chancellor) லிம் பின்னின் சேவைக்கு அர்ப்பணம் செய்யும் வண்ணம் அக்கவிதைத் தொகுப்பு வெளியீடு கண்டுள்ளது.

www.tamilarangam.net

அதிபர் எஸ் ஆர் நாதன் அதனை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். அப்போது அவர், வரலாற்றை ரொட்டித்துண்டுக்கு ஒப்பிட்டுப் பேசினார். அத்துண்டின் நறுக்கிய துணுக்கு ஒவ்வொன்றும் சிங்கப்பூரின் வரலாற்றைப் பிரதிபலிப்பதாகச் சொன்னார்.

சிங்கப்பூரின் 41 கவிஞர்களின் 106 கவிதைகள் நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ்க் கவிதைகள் சில ஆங்கில மொழிபெயர்ப்புடன் இடம்பெற்றுள்ளன.

பிரபல புத்தகக் கடைகளில் கிடைக்கும் அந்நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்க்கவிதைகளை சிங்கை இணையத்தில் இடம் பெறச் செய்ய முயற்சிகள் எடுக்கப்படும்.

## வரலாற்றுச் சின்னமாக வங்கி அறிவிப்பு

சிங்கப்பூரின் வரலாற்றுச் சின்னங்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது. முதன் முதலில் ஒரு வங்கிக் கட்டடம் வரலாற்று நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. யுனைடெட் ஓவர்சீஸ் பேங்க் (யூஓபி) வங்கிக்கு அப்பெருமை கொடுக்கப்பட்டுள்ளது.

யூஓபி பிளாசா2-ல் (UOB Plaza2) நடந்த விழாவில் நினைவுப் பட்டயத்தை (plaque) தேசிய மரபுடைமைக் கழகத்தின் (national heritage board) தலைமை அதிகாரி திரு லிம் சியாம் கிம் திறந்து வைத்தார். இந்த அதிநவீன(ultra-modern) யூஓபி பிளாசா அமைந்திருக்கும் இடத்தில்தான் மூன்று மாடி பொன்ஹாம் (Bonham) கட்டடம் முன்பு இருந்தது. அக்கட்டத்தில் 1953ம் ஆண்டு இந்த வங்கி தன் நடவடிக்கைகைகளைத் தொடங்கியது.

சரவா நாட்டில் பிறந்த டத்தோ வீ சொங் யா என்பவர், வங்கியைத் தன் ஆறு நண்பர்களுடன் சேர்ந்து யுனைடெட் சீன வங்கி என்ற பெயரில் தொடங்கினார். இருமாதங்களுக்குள் அவ்வங்கி செயல்படத்தொடங்கியது.

1965ம் ஆண்டு சிங்கப்பூர் மலேசியாவை விட்டுப் பிரிந்து தனிக்குடியரசானபோது (republic) வங்கியின் பெயர் யுனைட்டெட் ஓவர்சீஸ் பேங்க் என மாற்றப்பட்டது. அதே ஆண்டில் அது தன் அனைத்துலக மயத்திட்டத்தையும் (globalsisation programme) மேற்கொண்டது.

1970ம் ஆண்டு சிங்கப்பூர் பங்குச் சந்தையிலும் ( stock market) மலேசிய பங்குச் சந்தையிலும் யூஓபி வங்கி பட்டியலிடப்பட்டது(listed). யூஓபி குழு நிறுவனத்திற்கு இப்போது 6000 வெள்ளி மூலதனமும்(capital) காப்பு நிதிகளும் (reserves) இருக்கின்றன. இதன் மொத்த சொத்துகளின் மதிப்பு(value of its total assets) 53,000 மில்லியன் வெள்ளியாகும்.

சிங்கப்பூரில் 73 கிளைகளையும் வெளிநாடுகளில் 64 அலுவலகங்களையும் கொண்ட யூஓபி. சிங்கப்பூரின் தொழில்மயத் திட்டத்தில்(industrilisation) முக்கிய பங்காற்றியது. சிங்கப்பூரை இவ்வட்டார நிதி மையமாக (financial centre) உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் ஆதரவு கொடுத்தது.

சிங்கப்பூரின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ள இந்த வங்கியை வரலாற்று நினைவுச் சின்னமாகத் தேர்ந்தெடுத்ததில் ஆச்சரியமில்லைதான்.

## *கட்டாயக் கல்வி -அரசாங்கம் பரிசீலனை*

முதல் உலகப் பொருளியல் (first world economy), உலகத் தரமிக்க தாயகம் (world class home) என்ற சிங்கப்பூர் இலக்கை நிறைவேற்றும் வகையில் தொடக்கநிலை நான்காம் வகுப்பு வரை கட்டாயக் கல்வியை அறிமுகப் படுத்துவது குறித்து கல்வி அமைச்சை பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிங்கப்பூருக்கு ஒவ்வொரு சிங்கப்பூரரும் முக்கியம் (everyone counts) என்பதால் கட்டாயக் கல்வி குறித்துப் பரிசீலிக்கும்படி கல்வி அமைச்சைத் தாம் கேட்டுக்கொண்டிருப்பதாக பிரமதர் கடந்த வாரம் (அக்டோபர் 13) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை(2nd session of the 9th parliment) தொடங்கிவைத்து அதிபர் எஸ் ஆர் நாதன் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் விவாதத்தில் கலந்துகொண்டு பிரதமர் கோ சோக் டோங் பேசினார்.

அனைவரும் கல்வி கற்கவேண்டும். ஒவ்வொரு சிங்கப்பூரரும் வாழ்க்கையில் பள்ளிப் படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருக்கவேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

சிங்கப்பூரில் ஒவ்வொரு ஆண்டும் மூன்று விழுக்காட்டினர்அதாவது 1500 சிறுவர்கள் தொடக்கநிலை முதல் வகுப்பில் பதிவதில்லை என்ற புள்ளிவிவரம் (statistics) தன்னை

***Russia:***Sukumar,Paraman/Moscow ,***KSA:***Prof. Masilamani;***Dubai:***Naseer ***Bahrain:***Abdul ,***Oman:***Kannan
***SriLanka:***Kamsananthy,Mahesan/Jaffna,Devakadadsam,Thamaraitivan/Trinco,Relanki Selvaraja, Ilancheliyan,
Sokkello Shanmugam /Colombo,K.Sabaratnam,V.Kanthakumar/Batticaloa,Satchi/Vavuniya,Bala/Hatton,Antony
Jeeva,Kanagaratnam/Kandy,Dr.Thavayogan/Matale,Ramesh/Kurunagal, Piriya/Mullaitivu,Amaradas/Kilinochi
Valvai.Manoharan/Kalutara.,***USA:***Baskaran,***Australia:***Pavalam,Pathma,***Korea:***Rameer***Japan:***Satchi/***Fiji:***Satchi

www.tamilarangam.net

இந்த மூன்று விழுக்காடு என்பது மிகவும் குறைவு என்பதால் கட்டாயக் கல்வியை இதுவரை கல்வி அமைச்சு எதிர்த்துவந்தது. முதல் உலகப் பொருளியல் (வளர்ச்சிகண்ட), உலகத் தர தாயகம் என்ற நம்முடைய இலக்கை நிறைவேற்ற உதவும் நீண்டகால அணுகுமுறையை(approach) தமது உரையில் பிரதமர் விளக்கினார். அந்த இலக்கை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய பல இடையூறுகளை அவர் எடுத்துரைத்தார்.

## குறைந்துவரும் பிறப்பு விகிதம்

சிங்கப்பூரில் பிறப்பு விகிதம் குறைந்து வருவதை ஓர் இடையூறாகக் குறிப்பிட்ட பிரதமர், உயர்நிலைக் கல்விக்கும் மேலாகப் படித்த பெண்களில் ஐவரில் ஒருவர் தனது ஆயுள் முழுவதும் மணமாகமலேயே உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டினார். ஆகையால் குறிப்பாக அதிகக் கல்வி கற்ற பெண்கள் திருமணம் செய்து கொண்டு இல்ற வாழ்க்கையில் ஈடுபட நாம் ஊக்குவிக்க வேண்டும்.

அதைப்போல கல்வி கற்ற திறமைமிக்க வெளிநாட்டவர்களைக் கவர்வதோடு (attract foreign talents) வெளிநாட்டில் குடியேறும் சிங்கப்பூரர்களையும் நாம் இங்கேயே தக்கவைத்துக்கொள்ள பாடுபட வேண்டும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

தாயகத்தில் மக்களின் உணர்ச்சி பூர்வமான ஈடுபாட்டை (active citizenship) அதிகரிக்கும் வகையில் ஒரு வெகுமதித்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தும் என்றார். பயனுள்ள மோயசனைகளைத் தனியாகவோ குழுவாகவோ தெரிவிக்கும் சிங்கப்பூரர்களுக்கு அரசாங்கம் வெகுமதி வழங்கும். இந்த வழியில் சிங்கப்பூரை யோசனைகள் நிரம்பிய நாடாக உருவாக்கமுடியும் என்றார் பிரதமர் கோ.

மக்களுடன் கலந்து ஆலோசனை, மக்கள் ஈடுபாடு பற்றி விளக்கிய அவர், கலந்தாலோசனை என்பது ஒவ்வொரு சிங்கப்பூரரையும் உள்ளடக்க வேண்டும் என்றோ ஒவ்வொரு கொள்கையையும் அமல்படுத்துவதற்கு முன் மக்களுடன் அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்றோ பொருட்படாது என்றார்.

அதைப்போலவே சிங்கப்பூரர்கள் தெரிவிக்கும் எல்லா யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்க முடியாது. அரசாங்கத்தின் கொள்ளைகையை மாற்ற வேண்டும் என்று விரும்பும் எவரும் அரசாங்கத்துடன் விவாதத்தை எதிர்நோக்க வேண்டும் என்றார். பாதக எண்ணம் அல்லது உள்நோக்கம் இல்லாதவர்கள் தங்கள் யோசனையை அரசாங்கம் எதிர்க்குமோ என்று அஞ்சத் தேவையில்லை என்று பிரதமர் கோ சொன்னார்.

" கல்வி நீண்ட காலம் நீடிக்கும். மரத்தை வளர்க்க பத்தாண்டு எடுக்கும். மனிதரை வளர்க்க நூறாண்டு எடுக்கும்" சீனப் பழமொழி

## சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தில் முதல் முனைவர் பட்டம்

சிங்கப்பூரில் 1887 இல் , முதல் தமிழ் இலக்கியம் தோன்றியது. சிங்கப்பூரில் 1959லிருந்து தமிழ் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. இருப்பினும் இப்பொழுதான் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் முனைவர் பட்ட அளவிற்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

"சிங்கப்பூர்த் தமிழ் படைப்பிலக்கியம் ஒரு திறனாய்வு 1965-1990" என்னும் தலைப்பில் இவ்வாய்வு அமைந்தது. சிங்கப்பூர் நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகததில் இவ்வாய்வை இரா சிவகுமாரன் மேற்கொண்டார்.

ஆய்வை வெற்றிகரமாக முடித்துக் கடந்த 27 ஆகஸ்ட் 199 என்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் டாக்டர் பட்டமும் பெற்றார்.

சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக்கியம் தொடர்பாகப் பல ஆய்வுக்கட்டுரைகள் வந்திருந்த போதிலும் முதன் முதலாக முனைவர் ப்டட அளவில் சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியத்தை ஆய்வு செய்தது இவரே. 1965 முதல் 1990 வரை நூல் விடவில் வெளியாகிய மரபுக் கவிதைகள், குழந்தைப் பாடல்கள், புதுக்கவிதைகள், நாவல்கள்,நாடகங்கள்,ஆகியவற்றை இவர் ஆய்வு செய்துள்ளார்.

டாக்டர் இரா சிவகுமாரன் தற்பொழுது சிங்கப்பூர் தேசிய கல்விக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணி புரிந்து வருகிறார். தமது ஓய்வு நேரத்தில் பழைய ஏர்போர்ட் ரோடு வசிப்போர் குழு. ஈனோஸ் தொகுதி இந்திய நடவடிக்கை நிர்வாகக்குழு, சமூக நிலைய மேலாண்மைக்குழு ஆகியவற்றின் உறுப்பினராகச் சமூக சேவையாற்றுகிறார். சிங்கப்பூர் திருமுறை மாநாட்டின் துணைச் செயலாளராகவும் பணியாற்றிவருகிறார்.


அன்பான தமிழர்களே! உங்களில் பலர் சந்தாசெலுத்தி, ஆக்கங்கள் அனுப்பி, அருமையான வாசகர்களாக கடிதம் எழுதி மிகமிக ஈடுபாடு காட்டிவருகிறீர்கள். உங்களுக்கு இதயபூர்வமான நன்றிகள்!!!


www.tamilarangam.net



# கலாபூஷணம் விருது பெற்ற

# நவாலியூர் நா.செல்லத்துரை


Department of Hindu Religious and Cultural Affairs



இலங்கை கலாச்சார அமைச்சு சில வேளைகளில் தமிழர்களையும் கௌரவித்துக் கொள்கின்றது. அதிலும் சிபார்சுகள் இன்றி திறமையான கலைஞர்களை தேர்வு செய்து பரிசில்கள் வழங்குவதும் ஆச்சர்யப்பட வேண்டிய விடயம். அந்த வகையில் யாழ்ப்பாணம் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல கலைஞர் நவாலியூர். நா.செல்லத்துரை அவர்களை கலாச்சார அமைச்சு 1998 ஆம் ஆண்டிற்கான "கலாபூஷணம்" விருது வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

காலம் கடந்து இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டாலும் தகுதியான ஒரு கலைஞருக்கே வழங்கப்பட்டிருக்கிறது. 1951–இல் இருந்து கலைப் பணியை ஆரம்பித்திருக்கும் திரு நவாலியூர்.நா.செல்லத்துரை அவர்கள் நாடகங்கள், கதைகள், கவிதைகள் எனப் பல துறைகளில் ஒளிவீசியவர். நாடகத் துறையில் சரித்திரம், இலக்கியம், புராணம், சமூகம் என ஐம்பத்திற்கும் மேற்பட்ட நாடகங்களில் பரிணமித்துள்ளார். இவை கண்டி, மாத்தளை, மௌசாக்கலை, பன்விலை, தெல்தெனிய, வத்தேகம, நாவலப்பிட்டிய போன்ற மலை நாட்டுப் பிரதேசத்திலும், கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பரந்தன், வன்னி என தமிழர்கள் நிறைந்து வாழும் பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டிருக்கின்றன.

1976இல் இலங்கையில் தயாரிக்கப்பட்ட "காத்திப்பேன் உனக்காக" வசனம் எழுதியதுடன் முக்கிய குணச்சித்திர பாத்திரத்திலும் நடித்திருக்கின்றார்.

1974இல் இவர் எழுதி மேடையேற்றிய "தாய் நாடு" என்னும் நாடகம் மிகவும் புகழ் பெற்று இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேறியது. இந் நாடகத்தின் கரு கண்டியைக் கடைசியாக ஆண்ட தமிழ் மன்னன் கண்ணுச்சாமி என்னும் "மூன்றாம் விக்கிரம ராஜசிங்கனின்" வரலாற்றை மையமாகக் கொண்ட ஓரங்க நாடகமாகும். பல மேடையேற்றங்களுக்குப் பின் நாடகம் புகழடைந்து வரும் வேளையில் "தாய் நாடு" என்ற பெயர் இலங்கை அரசின் பார்வையில் வித்தியாசமாக தெரிந்திருக்க வேண்டும். பின்பு இந்த நாடகத்தை மேடையேற்றக் கூடாது என பொலிசாரால் அனுமதி மறுக்கப்பட, அதே நாடகத்தை ராஜவிசுவாசம் என பெயர் மாற்றம் செய்து பின்பு பல தடவைகள் மேடையேற்றிய பெருமைக்குரியவர்.

1968இல் "முகை வெடித்த மொட்டு" என்ற நாவலை எழுதி வெளியிட்டு இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசினை பெற்றவர்.

பைபிளில் (வேதாகமம்) 150 சங்கீதங்களையும் இலகு தமிழில் கவிதையாக்கியுள்ளார். இவற்றில் 40 கவிதைகள் (இப்போது திருப்பாடல்கள் என்னும் பெயர்) யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் வார இதழான சஞ்சீவியில் வெளியாகி இருந்தது.

1977இல் இலங்கை வானொலியில் கிறிஸ்தவ நேர நிகழ்ச்சியில் பல நாடகங்களை தயாரித்து வழங்கியிருக்கின்றார்.

1988இல் கந்தர்மடப் புலவர் செ.தெட்சணாமூர்த்தியின் எழுத்துருவில் தயாரிக்கப்பட்ட வீடியோ படமான "பூதத் தம்பி"யில் புரட்சி வேடம் ஒன்றில் நடித்து பாராட்டுக்களை பெற்றவர்.

தான் எழுதிய சில நாடகங்களைத் தொகுத்து "உலகம் வெளியிட்டிருக்கின்றார்.

இவர் எழுத்துத் துறையில் மிளிர்ந்தாரா? கலைத் துறையில் மிளிர்ந்தாரா? என்று பிரித்துப் பார்க்க முடியவில்லை. இவருடைய எழுத்தில் ராஜரிஷிக்களுக்குள்ள இறுக்கமும், ராஜகுமாரிகளுக்குள்ள இளக்கமும் கைகோர்த்து செல்கின்ற கமலாலயமும் இணைந்திருக்கும். இவரின் எழுதுகோலின் சித்து விளையாட்டுக்கள் சிந்தனை ஊற்று மட்டுமல்ல கவிதைகள், கதைகளின் களமாகவும் திகழ்ந்துள்ளன.

வெற்றிலை ஒரு நிறம், சுண்ணாம்பு ஒரு நிறம், பாக்கோ ஒரு நிறம். இவை மூன்றும் சேருகின்ற போது விளைவது சிவப்பு நிறம். இந்த சிவப்பு இவை மூன்றும் சேருகின்ற போது வருகின்றதா? அல்லாவிட்டால் இந்த மூன்றிலும் சிவப்பு ஒழிந்து இருக்கின்றதா?

கதை, கவிதை, நடிப்பு இப்படி பல்துறையும் இவரிடம் அடங்கியிருந்ததால் இன்று "கலாபூஷணம்" விருது இவரை நாடி வந்திருக்கிறது.

அறுபத்து ஐந்து வயதிற்கு மேலான போதும் எழுத்திலும் நடிப்பிலும் இருபத்தைந்து வயது இளமையை பதியவைக்கும் திரு நவாலியூர். நா.செல்லத்துரை அவர்களுக்கு இலங்கை கலாச்சார அமைச்சு வழங்கியிருக்கும் "கலாபூஷணம்" விருது பொருத்தமானதே.

**வண்ணை தெய்வம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறார்கள்பகுதி:

# சிறுவர்களுக்கான கதைகள்: ராம். பாஸ்கர்

## நான்கு மாடுகளும் ஒரு சிங்கமும்

நான்கு மாடுகள் ஓரிடத்தில் ஒற்றுமையாக மேய்ந்து கொண்டிருந்தன. அவைகளை சிங்கம் ஒன்று பார்த்தது. கொழுத்த மாடுகளைப் பார்த்ததும் சிங்கத்திற்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. ஆகா! நல்ல வேட்டை என்று எண்ணியது. மாட்டுக்கறியைப் பற்றி அது நினைக்கும்போதே வாயின் ஓரத்தில் உமிழ்நீர் வடிய, நாக்கைத் துளாவியபடியே மாடுகளிடம் ஆக்கிரோஷமாகப் பாய்ந்தது. அப்போது நான்கு மாடுகளும் மிக ஒற்றுமையாக தம்முடைய கொம்புகளால் பாய்ந்து சிங்கத்தைத் தாக்கியது.

காட்டிற்கே ராஜாவான சிங்கம் மாடுகளால் உடம்பின் பல இடங்களில் காயம் ஏற்பட்டு ஓடியது. உயிர் தப்பித்தால் போதும் என்று ஓடிய சிங்கம், பின்னால் திரும்பிப் பார்த்து மாடுகள் துரத்தி வரவில்லையென்றதும் அதுவரை அதைப் பிடித்திருந்த பயம் அகன்று நிம்மதியாகியது. காயம் பட்ட உடல் சோர்ந்து போனதும், தளர்ந்து வீழ்ந்தது.

அவ்வழியாக வந்த நரி அச்சிங்கத்தைக் கண்டது. ‘கற்றாரைக் கற்றாரே காமுறுவர், மூர்க்கரை மூர்க்கரே முகருவர்’ என்ற பழமொழிக்கேற்ப நரி காயம் பட்ட சிங்கத்திடம் இரக்கத்துடன் பேசியது.

“சிங்க ராஜாவே, உங்களைக் கண்டாலே மிருகங்கள் காத தூரம் ஓடும். இக் காட்டில் யார் உங்களைக் காயப்படுத்தியது, சொல்லுங்கள்! இப்போதே நான் சென்று குடலை உருவி மாலையாகப் போட்டு வருகிறேன்” என்றது. உண்மையில் நல்ல நண்பனாக இருந்தது என்றால், நீ செய்தது தவறு என்று எடுத்துக் கூறும். நயவஞ்சகனான நரி சிங்கத்தை அழித்திட அல்லவா எண்ணியது. ஆகா இது தான் வாய்ப்பு. நாம் தனியாக மாடுகளை எதிர்த்து நின்று வெற்றி பெறமுடியாது. சிங்கத்தைத் தூண்டிவிட்டால் தான் அது முடியும். நமக்குக் கறியும் கிடைக்கும் என்று திட்டம் போட்டது. ஒன்றுமே தெரியாதது போல் கேட்டது.

‘சரிடா! தம்பி நரியாரே, நானே காயம் பட்டு வந்து விட்டேன். நீ அதுகளிடம் சென்றால், அதுகள் விடும் மூச்சிலேயே பொசுங்கிப் போய்விடுவாய் ’என்றது. ‘சரி ராஜா, நானொரு உபாயம் சொல்கிறேன். நீங்கள் புதர்ப்பக்கம் மறைந்து நில்லுங்கள். நான் சென்று அந்த மாடுகளுக்குள் கலகம் மூட்டிவிடுகின்றேன். ஒரு மாட்டை எப்படியாவது நைசாகப் பேசி, புதர்ப் பக்கம் அழைத்து வருகிறேன். நீங்கள் குபீரென்று பாய்ந்து கழுத்தைக் கடியுங்கள். நான் இரண்டு கண்களையும் மண் வீசி குருடாக்குகிறேன். ஆளுக்குப் பாதியாகப் பிரித்துச் சாப்பிடுவோம் என்றது. சிங்கமும் சரியென்றது.

மாடுகள் மேய்ந்த இடத்திற்கு சென்ற நரி, முன் ஜாக்கிரதையாய் தனியாக மேய்ந்து கொண்டிருந்த கறுப்பு மாட்டின் ஓரமாய் போய் சோகமாய் புல் சாப்பிடுவது போல் நடித்தது. நரி புல் தின்றதைப் பார்த்த கறுப்பு மாடு, ‘என்ன நரியாரே! சைவமாய் மாறிட்டியா?’ என்று கேட்டது. ஆமா, நான் இனிமேல் சுத்த சைவமா மாறிட்டேன். நீ ரொம்ப அழகாய் இருக்கே. ஆமா நீ வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிறே. உனக்கு நல்லவங்க கெட்டவங்க யாருன்னே தெரியமாட்டேங்குது. உன் உயர்ந்த குணத்திற்கு ஒரு தீங்கும் வராது. ஆனா உன்னை நினைச்சா பாவமா இருக்குது.’ என்று பவ்யமாய் பேசியது நரி.

‘ஏன் என்ன காரணம்?’ கறுப்பன் மாடு கேட்டது.

‘அந்த மூணு சேப்பன் பயலுக நல்ல புல்லு இருக்கிற இடமாப் பார்த்து மேய்ஞ்சிட்டு உன்னை இந்த கட்டாந்தரையைச் சுரண்ட விட்டிருக்கானுவ பாரு. மேலும், அவன்களுக்கு நீ கறுப்பன்கிறதாலே ரொம்ப இளக்காரம்பா. இதெல்லாம் நான் சொன்னா உனக்கு எங்கே மண்டையில் ஏறப்போகுது. பாவம் நீ. உன் எலும்பெல்லாம் தெரியும் போது, எனக்குப் பெரிய வயித்தெரிச்சலாயிருக்குது.’

www.tamilarangam.net

உடன் கறுப்பு மாடு சுதாரித்துக்கொண்டு பேசியது – 'அவங்க என்னை நல்லாத் தான் கவனிச்சுக்கிட்டு இருக்காங்க. நீ குசும்பு மூட்டாதே' என்றது கறுப்பன் மாடு.

உடனே நரி, 'கொஞ்சம் மெதுவா அவங்க காதுல வீழாம பேசு. நான் போய் அவங்ககிட்ட பேசறேன் பாரு. அவங்கள்ள யாராவது ஒருத்தர் இந்தக் கட்டாந்தரையிலே வந்து புல் மேயட்டுமே பார்க்கலாம். அவங்க நல்லவங்களா இருந்தா அங்கே உன்னை அழைச்சிட்டுப் போகட்டுமே பார்ப்போம். நான் போய் கேட்கிறேன். சும்மாவிடக் கூடாது இதை. கறுப்புன்னா இளக்காரமா. இதோ போறேன்' என்றபடியே மெதுவாகச் சிவப்பு மாடுகளிடம் சென்றது. 'வணக்கங்க ' என்றது.
மூன்று பேரும் ஒரே குரலில், 'போடா வஞ்சகப் பயலே! போடா ' என்றன. நரி உடனே 'உங்களை நெனச்சாத் தான் பாவமா இருக்கு. அவன் கறுப்பன் நல்லா இருக்கணுமே நினைச்சு, அவனை நல்ல ஆளயர புல்லுல மேய விட்டுட்டு நீங்க இங்கே கட்டாந்தரையிலே மேயறீங்க. ஆனா அவன் என் கிட்ட என்ன சொன்னான் தெரியுமா? 'சிவப்பு மாடுகள் மூன்றும் சேர்ந்து கெட்டது' என்று சொன்னான். 'என் கிட்ட நின்னு யாரும் மோதமுடியாது. நாலு பேரை எதிர்த்துச் சமாளிப்பேன். நேற்று கூட சிங்கத்தை கிழிச்சு அனுப்பினதே நான் தான். மேலும், நான் தான் அழகு. என் அழகு என்ன, கம்பீரம் என்ன. ஆண்களுக்குக் கறுப்புத் தான் அழகு. என்ன ஒத்துக்கிறியான்'னு என்னைக் கேட்டான். நான் அவன் மேல உள்ள பயத்தில ஒண்ணும் சொல்லல. உண்மையைப் பேசுறது தான் என் வழக்கம். அதனால், ஆண்களுக்கு கறுப்பு தான் அழகு என்கிறதை ஒத்துக்கிட்டு வந்திட்டேன்.

அந்த நேரம் பார்த்து, கறுப்பு மாடு காதில் ஈ ஒன்று புகுந்து விட, ஈயை வெளியேற்ற தலையை பலமாக ஆட்டியது கறுப்பு மாடு. நரி உடனே 'பார்த்தீர்களா ! நான் தான் தலைவன் பெரிய ஆளுங்கிறான். இதோ பாருங்க. கொம்பை ஆட்டி என் கிட்ட யாரும் மோதி ஜெயிக்க முடியாதென்கிறான். நேற்று சிங்கத்தை ஓட ஓட விரட்டினது அவன் மட்டும் தானா? கேட்டுப் போவோம்னு வந்தேன். அவனைப் பற்றித் தெரியும். சுரியான புழுகுணிப் பயல். நீங்க எல்லாம் தங்கம்'. இப்படிப் பலப்பலவாறாய் சிவப்பு மாடுகளைப் புகழ்ந்து பேசிக்கொண்டே இருந்தது. மாலை நேரம் ஆகிவிட்டது. நரியின் இப்போதனையால் மனம் வெறுத்த மூன்று சிவப்பு மாடுகளும் வேகமாகத் தம் தொழுவத்தை நோக்கிப் புறப்பட்டன.

எப்போதும் தன்னையும் கூப்பீட்டுச் செல்லும் சிவப்பு மாடுகள் இன்று கூப்பிடாமல், நான் கூப்பீட்டும் காதில் வாங்காமல் செல்கின்றனவே. என்ன காரணம் என்று கலங்கி நின்றது கறுப்பன் மாடு. நரி இதைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டது. என்றாலும், அதை வெளிக்காட்டாமல் முன்னை விடச் சோகமாய் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு, 'பார்த்தியா! உன் கறுப்பு அவர்களுக்கு ஒத்துக்கொள்ளாதாம். அதற்குத் தான் தனியே மேய்ந்து கொண்டிருந்தார்கள். என்னைக் கூட வருந்தியழைத்தார்கள். என்னையும் உன்னுடன் சேராதே என்றார்கள். நான் தான் உன் மேல் இரக்கப்பட்டு வந்தேன். நீ அழாதே. இதோ பாரு! என் வீடு மாளிகையாட்டம் இருக்குது. நீ அங்கே ராஜாவாட்டம் இருக்கலாம்னு அழைத்தது. இதை நம்பிய கறுப்பு மாடு நரி பின்னே சென்றது. புதர் அருகே ஏற்கனவே சொல்லியிருந்தபடி சிங்கம் பாய்ந்து கறுப்பு மாட்டின் கழுத்தைப் பிடிக்க, நரி மாட்டின் கண்களில் மண்ணை வாரி இறைக்க, கறுப்பு மாடு கீழே வீழ, அதைக் கொன்று இரண்டும் சாப்பிட்டன. ஒருவாரம் சென்றபின், மற்ற மாடுகளிடமும் சென்று விதவிதமான பொய்களைச் சொல்லி கலகமூட்டி மற்ற மூன்று மாடுகளையும் ஒன்றன் பின் ஒன்றாகச் சாப்பிட்டன.

ஆகவே, குழந்தைகளே படித்தீர்களா இக் கதையை. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், நீங்கள் எல்லாம் ஒற்றுமையாய் இருக்கவேண்டும். முதலில், கூடப்பிறந்தவர்களுடன் ஒற்றுமையாய் இருக்கவேண்டும். மற்றும் பள்ளிக்கூடத்தில் நம் வகுப்புத் தோழர்களிடத்தில் நீங்கள் ஒற்றுமையாய் இருக்கவேண்டும். மற்ற இன மக்களிடையேயும் சகிப்புத்தன்மையோடும் ஒற்றுமையோடும் இருக்கவேண்டும். புரிகிறதா?

www.tamilarangam.net

## சிறுவர்களுக்கான கதைகள்: ராம். பாஸ்கர்
### முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

பாரத நாடு முன்னொரு காலத்தில் 56 தேசங்களாகப் பிளவு பட்டிருந்த போது, அதிலொன்றான சேரநாட்டை நெடுஞ்சேரலாதன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவருக்கு இரு மகன்கள். மூத்தவன் செங்குட்டுவன். இளையவன் இளங்கோ. மகன்கள் இருவரும் கல்வியிலும், வீரத்திலும் மிகச் சிறந்து விளங்கினர்.

ஒருநாள், சேரமன்னர் சபைக்கு ஒரு முனிவர் வந்தார். அவர் சொன்னதெல்லாம் நடந்தது. மன்னர் நெடுஞ்சேரலாதன் தம் மனைவி, மக்களோடு முனிவரின் கால்களில் விழுந்து வணங்கினார். தனக்குச் சரிசமமான ஆசனத்தில் முனிவரை அமரவைத்தார் மன்னர்.

முனிவர் அரசகுமாரர்களை உற்றுநோக்கினார். பின், மன்னரை நோக்கி, மன்னா உங்கள் இளைய குமாரன் தான் முடி சூடுவான் என்று கூறினார். உடனே இளையவரான இளங்கோ எழுந்து, ‘ இது என்ன நியாயம், அருமை அண்ணன் ஆட்சி புரிய இருக்கும்போது என்னை மன்னன் என்று சொல்கின்றீர்களே. இது முறையா? ஆனால், முனிவர் பெருமானே உங்கள் வாக்கை நான் மதிக்கிறேன். உங்கள் வாக்குப்படி பலித்து விடுமோ என்று அஞ்சுகிறேன். என் அண்ணன் செங்குட்டுவனே அரசனாக வேண்டும். அதற்காக நான் துறவறம் ஏற்கிறேன். எனக்கு தீட்சை கொடுங்கள் முனிவ பெருமானே!’ என்று முனிவரின் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினார்.

மேலும், தன்னுடைய அழகிய பட்டாடைகளையும் பொன்னாபரணங்களையும் கழற்றினார். தாய், தந்தையர், மக்கள் எவ்வளவோ கதறியும், வற்புறுத்தியும் கேளாமல் காவியுடை உடுத்தி அரண்மனையை விட்டு வெளியேறினார். குணவாயில் கோட்டம் என்ற இடத்தை அடைந்து தியானம் செய்தார். அறிவில் சிறந்த ஞான குருமார்களுடன் பழகினார். தமிழில் பெரும் புலமை பெற்றார். அழியாக் காவியமான ‘சிலப்பதிகாரம்’ என்ற காவியம் படைத்தார்.

இளங்கோ அரண்மனையை விட்டு வெளியேறியிராவிட்டால், முனிவர் வாக்குப்படி முனிவரைக் கொண்டே உடனே பட்டாபிஷேகம் செய்வித்திருப்பார் மன்னர். தன் அண்ணனுக்குக் கிடைக்கும் பதவியை தான் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இளங்கோ அடிகள் தியாகம் செய்தார். ஆனால் இன்று, பதவிக்காகக் கூடப்பிறந்த அண்ணனையே கொலை செய்கின்ற காலமாகப் போய்விட்டது. கேவலம் 100 குழி நிலத்திற்காக நடக்கின்ற கொலைகள் எத்தனை எத்தனை.

குழந்தைகளே! இது போன்ற நிகழ்ச்சிகளை நீங்கள் பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவற்றில் பார்த்திருப்பீர்கள். இது போன்ற ஈனத்தனமான செயல்களை நீங்கள் எக்காலத்திலும் செய்தலாகாது.

அன்று பதவியைத் துறந்தாலும் தமிழன்னையின் சிம்மாசனத்தில் ராஜா போன்று அமர்ந்திருக்கின்றார் இளங்கோவடிகள். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும் காப்பியச் சக்கரவர்த்தியாகப் பேசப்படுகின்றார். இன்றும் நம் மனங்களில் முடிசூடாமன்னராக இருக்கின்றார்.

குழந்தைகளே! நீங்களும் அவர் போன்று தியாக உணர்ச்சியுடன் வாழவேண்டும். உங்களுக்கு கிடைக்கும் உணவை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்ணுங்கள். அது தான் தியாகம்.

இதைத்தான் பேரறிஞர் டாக்டர் மு.வரதராசன் சொன்னார்:
‘வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது, உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகம் தான். ஆனால், அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் தியாகம் தான் பெரிய தியாகம்’
ஆகவே, குழந்தைகளே அவர் சொன்னபடி நடவுங்கள். உயர்வு கிடைக்கும்.

www.tamilarangam.net

## சிறுவர் பகுதி

### எறும்பு

எஸ். ஜி. இசட். கான், திருப்பூர்

ஊர்ந்து செல்பவற்றுள் சாதாரணக் கண்களுக்கு ஓரளவு தெளிவாகத் தெரிபவைகளில் சிறியது எறும்பு. இவற்றுள் பலவகை உள்ளன. வீடுகளில் பெரும்பாலும் இனிப்புப் பண்டங்களின் சமீபம் சுறுசுறுப்பான கறுப்பு சீனி எறும்புகள் தென்படும். இவை அருவெறுப்பை ஏற்படுத்துவதில்லை. எவரையும் கடிப்பதும் இல்லை. வெயில் இல்லாத இடங்களில் அவை பற்றிய பண்டங்களை லேசாக உதறினால், சிறிது நேரம் வைத்திருந்தால் அவை ஓடிவிடும்.

மற்றொன்று, மிக நுண்ணிய எறும்புகள் வரிசைக் கிரமமாக குளிர்ச்சியான இடங்களில், டம்ளர் செம்பு போன்றவற்றில் நிறைந்து கொள்ளும். இவற்றைப் போக்க ஒரு குச்சியில் துணியைச் சுற்றி லேசாக மண்ணெண்ணெயில் தொட்டு, அதற்குச் சமீபமான இடங்களில் தடவி விட்டால், அவை மறைந்து விடும்.

அடுத்தது, சிவப்பு வர்ணத்தில் சிறியதும், பெரியதுமாக இருவகை எறும்புகள் உள்ளன. இதில் ஒன்றின் கடி மிதமாகவும், மற்றொன்றின் கடி அதிகமாகவும் இருக்கும். இனிப்பு, மற்றும் ஈரக்கசிவுள்ள இடங்களில் தென்படும்.

இந்த எறும்புகள் தம் எடையை விட அதிக எடை கொண்ட பொருளை வட்டமாகச் சுற்றி, பற்றி தம் இடத்திற்கு கொண்டு செல்லும். சாரை சாரையாக அணிவகுத்துச் செல்லும். அதே சமயம், எதிர் எதிராக ஒன்றை ஒன்று சந்தித்தும் செல்லும்.

தூங்கும் வேளை சில சமயங்களில், கறுப்பு எறும்போ, சிவப்பு எறும்போ காதிற்குள் சென்று விடும். அச்சமயம் லேசான துணியை அல்லது பஞ்சு சுற்றிய லேசான குச்சியைக் கொண்டு காதில்- காதின் சவ்வு பாதிக்காத வண்ணம்- தேங்காய் எண்ணெயில் குச்சியை நனைத்துக் காதில் சுழற்றினால், அந்த எண்ணெய்ப் பசையில் எறும்பு ஒட்டிக்கொண்டு வெளியேறிவிடும்.

பானமோ, காபியோ குடிக்கும்போது, எறும்பு எவையும் அதில் விழுந்திருப்பது தெரிந்தால், கரண்டியால் அல்லது விரலால் எடுத்துவிட்டுக் குடிப்பது நலம். ஒருவேளை பருகியபின் தெரிந்தாலோ, வேறெவரும் அதில் எறும்பிருந்ததாகத் தெரிவித்தாலோ பயப்பட வேண்டியதில்லை. குமட்டலோ, சஞ்சலமோ ஏற்பட்டுவிடும் என்ற சங்கடம் கருதியே பெரியவர்கள் சிலர் விளையாட்டாக சொல்லி வைத்தார்கள் 'எறும்பு தின்றால் பார்வை நன்கு தெரியும்' என்று! இப்போது உண்மை புரிந்ததா குழந்தைகளே!!

## கவிஞர் கந்தவனம் தரும்
# கனடிய காட்சிகள்
### முதியவர் பழுதாக்கும் பொழுது

'எப்படிச் சுகம்?'
'அதையேன் கேட்கிறியள்...'
'ஏன், என்ன சங்கதி?'
'பைத்தியம் பிடிச்சாலும் பிடிக்கும். பொழுதே போகுதில்லை. ஏன் இஞ்சை வந்தன் எண்டு கிடக்கு.'

இவ்விதம் அலுப்பும் சலிப்புமான நடைப்பிண வாழ்க்கையை நடத்திக் கொண்டு திரியும் தமிழ் முதியவர் கனடாவில் அதிகம் பேர்.

வெள்ளைக்கார முதியவர் ஓய்வு பெற்றதன் பின்புதான் வாழ்க்கையையே அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். சிலர் திருமணம் செய்ய நினைக்கிறார்கள். சிலர் பிரயாணம் செய்ய விரும்புகிறார்கள். சிலர் புதிய தொழில் எதையாவது ஆரம்பிப்பது பற்றிச் சிந்திக்கிறார்கள். சிலர் முழு நேர அல்லது பகுதி நேர வேலை தேடுகிறார்கள். யாரோ சொன்னார்கள், கனடாவில் இந்த பாதுகாப்பு ஏன்கின்ற வேலை இருக்கிறதே, அது சும்மா இருக்க விரும்பாத முதியவர்களுக்கு என்றே தொடங்கப்பட்டதாம்.

கனடா சும்மா இருக்க விரும்பாத நாடு. சுறுசுறுப்பாக இயங்குவதும் சூடான கோப்பி குடிப்பதும் அதன் இணைபிரியாத இயல்புகள்.

அதுவும் ரொறன்ரோ மாநகரம் உலகத்திலேயே சிறந்த நகரம். நான் கூறவில்லை. ஜெனிவாவில் இயங்கும் ஆய்வுத் தகவல் குழு ஒன்று செய்த பிரகடனம் இது. Fortune பத்திரிகை மேற்கொண்ட ஆய்வு ஒன்றும் ரொறன்ரோவையே தலைசிறந்த நகரமாகத் தெரிவு செய்திருக்கிறது.

இத் தாபனங்கள் உலகத்தின் பிரதான நகரங்களிற் காணப்படும் தொழில்-நிதிச் சேவைகள், தொழில் வாய்ப்புகள், குடியிருப்பு வசதி, கல்வி வசதி, கலை கலாசார வளர்ச்சி, சுகாதார வசதி, தனிமனித வாழ்க்கை என்பவற்றை மதிப்பீடு செய்து அவை யாவும் எமது நகரத்தில் மிகச் சிறப்பாக உள்ளனவென்ற முடிவுக்கு வந்திருக்கின்றன. ரொறன்ரோ சுத்தமாகவும் பசுமை நிறைந்ததாகவும் உள்ளதாம். குற்றச் செயல்களும் குறைவாம். கட்டுப்பாடான சதந்திரம் நன்கு கடைப்பிடிக்கப்படுவதுடன் தனிமனித பாதுகாப்பு என்பது தலைசிறந்த அம்சமாக உள்ளதாம். பொழுது போக்கு, உல்லாச வாழ்க்கை என்பனவும் உச்சமாக இருக்கின்றனவாம்.

இத்தகைய தலைசிறந்த நகரத்தில் இருந்து கொண்டு 'பைத்தியம் பிடிச்சாலும் பிடிக்கும்' என்று தலையைப் பிடுங்குவது தகாது. பொழுது போகவில்லை என்று கொட்டாவி விட்டால், அது ரொறன்ரோவில் அல்ல பிழை, எமமிலேதான்.

ஆற்று வெள்ளத்தில் அள்ளுண்டு போகவேண்டாம். கரையில் இருந்தவாறே அதன் அதீத அழகை, இயக்கத்தை இரசித்துக் கொண்டு இருந்தாலே போதும். பொழுது போவதே தெரியாது.

அது சரி, தமிழ் மக்கள் எந்த அளவிலும் சுறுசுறுப்பில் குறைந்தவர்கள் அல்லர். எந்தச் சனி ஞாயிறுகளில் கூட்டங்களோ விழாக்களோ இல்லை? இவற்றை ஏன் நல்ல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக நாம் பயன்படுத்தக் கூடாது?

தமிழர் மத்தியில் ஊர் சார்ந்த, பள்ளிக்கூடம் சார்ந்த, சமய, கலை கலாசாரங்கள் தொடர்பான பல அமைப்புகள் உள்ளன. அவற்றில் விரும்பிய ஒன்றில் சேர்ந்து ஆக்கபூர்வமாக இயங்குதல் நல்லதொரு பொழுதுபோக்காக அமையும்.

மேலும் முதியோர்களுக்கென்றே சங்கங்கள் உள்ளனவே. அவற்றை ஏன் பொழுது போகாத முதியவர்கள் பயன்படுத்தக்கூடாது?

சும்மா இருந்தால் கனடாவில் வருத்தம் தான் வரும். உடல் வருத்தம் மனவருத்தம் ஆகிய சகல வருத்தங்களுக்கும் நல்ல மருந்து இயக்கம். சுறுசுறுப்பான இயக்கம்.

வெளவால் தின்னாத பழமும் இல்லை;
மாடுகள் குடியாத குளமும் இல்லை.

-பழமொழி

# இன்றைய இளைய தலைமுறையினர் தமது வயதுக்கேற்றவாறு நடக்கிறார்களா?

இங்கு திரும்பிய பக்கமெல்லாம் பிள்ளைகளின் நடத்தை பற்றிப் பெற்றோர் கவலைப்படும் காலமாகவே இன்றைய காலகட்டம் அமைந்துள்ளது. வீட்டுக்கு வீடு இளம் பராயத்தினர் (Teen agers) கொடுக்கும் கரைச்சல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிலும் புலம் பெயர்ந்த முதலாம் தலைமுறையினர் வீடுகளிலும், கீழைத்தேய கலாசாரப் பின்னணியுள்ள வீடுகளிலும் கட்டிளமைப் பருவத்தினரின் பிரச்சனைகள் பூதாகரமாக வியாபித்துள்ளது. கட்டுப்பாட்டுக் கோட்டை எங்கு கீற வேண்டும், அக்கோட்டிற்கு எங்கள் பிள்ளைகள் மதிப்புக் கொடுப்பார்களா? எனச் செய்வதறியாது திகைக்கிறோம். பாரம்பரிய இடைவெளி, மேற்கத்திய கலாசாரம், விளக்கமின்மை இவையெல்லாம் சேர்ந்து வீட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றன. எங்கள் நாட்டில் என்றால் இன்ன வயதுக்கு இன்ன விதமான பழக்கவழக்கங்கள். வாழ்க்கை முறைகள் எனத் திட்டவட்டமான வரையறைகள் காணப்பட்டன. பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரை, பிள்ளைகள் என்ன வயதினராக இருந்தாலும் பெற்றோர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தே நடந்தனர். வருமானம் என்ற ஒன்று இருந்தால்தான் திருமணம் என்ற பந்தத்தை ஏற்படுத்த முடியும். திருமணம் என்ற ஒன்று நடைபெற்றால் தான் குடும்பம் என்ற வாழ்க்கை முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நினைத்தபடியெல்லாம் வாழ்வதை ஏற்றுக் கொள்ளும் ஒரு நாட்டில் எம் இளம் தலைமுறையினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களை கட்டுப்படுத்தும் வழிவகை தெரியாது பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

இந்நாட்டில் வளரும் பிள்ளைகள் மிகவும் விரைவாக மனமுதிர்ச்சியும், உடல் வளர்ச்சியும் பெறுகிறார்கள். வேலைக்குச் செல்லும் இரட்டைப் பெற்றோர், சில சமயங்களில் ஒற்றைப் பெற்றோர் ஆகியோரின் பராமரிப்பில் வாழும் எம் பிள்ளைகள் மிகவும் சிறு வயதிலேயே தங்களைத் தாங்களே பராமரிக்கக் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் மனமுதிர்ச்சியும், துணிவும் கூடியவர்களாகவும், விரும்பப்படாத பல பழக்க வழக்கங்களை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்நாட்டில் சுலபமாகக் கிடைக்கும் ஊட்டச் சத்து மிக்க உணவு வகைகள் உடல் வலுவையும் அளவுக்கதிகமாகவே அளிக்கின்றன. இவற்றைவிட இந்நாட்டு வாழ்க்கையை ஓட்டிச் செல்லும் தொழில் நுட்ப அறிவும், திறன்களும் பெற்றோர்களிலும் பார்க்கப் பிள்ளைகளுக்கு அதிகமாகவே காணப்படுகின்றன. இவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பெற்றோர்களால் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நாடு ஒரு நுகர்வோர் சமூகத்தை (Consumer Society) அடிப்படையாகக் கொண்டுள்ளது. எவ்வளவு காசையும், எந்த வயதுப் பிள்ளையாலும் தமக்கு விரும்பிய பொருட்களை வாங்கிச் செலவழிக்க முடியும். ஆகவே இங்கு வாழும் இளம் பராயத்தினரின் தேவைகளுக்கு எல்லையே கிடையாது. தொலைக் காட்சியில் வரும் விளம்பரங்களும், ஒத்த குழுக்களின் நடத்தைகளும் இவர்களுக்குத் தேவையற்ற பொருட்களின் மேல் ஆசையை ஏற்படுத்துகின்றன. அளவுக்கதிகமான விலையுயர்ந்த ஆடைகள், உபகரணங்கள், வாகனங்கள் முதலியவற்றைச் சொந்தமாக வைத்திருக்கும் ஆசை இளம் வயதிலேயே ஆரம்பமாகி விடுகிறது. தொலைக் காட்சி விளம்பரங்கள், உடையலங்காரக் காட்சிகள் முதலியவற்றில் வரும் கதாபாத்திரங்களை மானசீகமாக ஆராதிக்கத் தொடங்கி விடுகிறார்கள். பின் அவர்களைப் போல் வருவதற்காக தமது உணவு முறைகள், தேகாப்பியாசப் பயிற்சிகள் முதலியவற்றையும் மாற்றியமைக்கிறார்கள். இவையெல்லாம் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றிற்கெல்லாம் அடிப்படைத் தேவை பணமாக இருப்பதால், படிப்பிலும் பார்க்கப் பணம் சம்பாதிக்கும் வழிகளை நாடுவதில் கவனம் செலுத்தத் தொடங்குகிறார்கள். மொத்தத்தில் பொருளாதாரச் சுதந்திரம் ஏற்பட்டவுடன் பெற்றோரின் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்ளாத ஒரு மனநிலையும் ஏற்பட்டு விடுகிறது.

**கனகேஸ்வரி நடராஜா**
Teacher
Earl Haig Secondary School

எமது நாட்டில் இளம் பிள்ளைகள் எல்லோரும் பொதுவாக ஒரே வகை நடத்தையுடையவர்களாகவே இருப்பர். ஆனால் இங்கோ பல வகைப்பட்ட உப கலாசாரங்களைக் (Sub-cultures) கொண்ட பிள்ளைகளைக் காணலாம். புலம் பெயர்ந்த இளம் தலைமுறையினர் (Immigrant Youth), தன்னினச் சேர்க்கை இளம் தலைமுறையினர் (Gay, Lesbian Youth), தொழில் நுட்ப அறிவு கூடிய இளம் தலைமுறையினர் (High-Tech-Youth), தமக்கு விரும்பியவரோடு வாழும் இளம் தலைமுறையினர் (Common-law relationship Youth), பொதுவான இளம் தலைமுறையினர் (Main-Stream Youth) எனப் பலவகைப்பட்ட கட்டிளமைப் பருவ வகையினரைக் காண்கிறோம். இவற்றை விட இவர்கள் பல்வேறு வகைப்பட்ட சங்கீத, நடன, நாடகக் குழுக்களைச் சார்ந்தவர்களாகவும் இருப்பர். ஒவ்வொரு வகை உப கலாசாரப் பிள்ளைகளுக்கும் அதற்கேற்ற வகையான நடத்தையும் காணப்படும். இவையெல்லாம் சமூகத்தாலும், பாடசாலையாலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சில சமயங்களில் சில பிள்ளைகள் ஒத்த குழுக்களால் (Peer Groups) தாங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகவே சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். பெற்றோர் இவர்களின் நடத்தையை குறை கூறும் பொழுது, அவர்களால் அதனை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும், ஏன் சில சமயங்களில் மெச்சப்படும் நடத்தையை தங்கள் பெற்றோர் விளங்கிக் கொள்ளாமல் இருக்கிறார்களே என்று நினைக்கின்றனர். இந் நாட்டில் நிலவும் சமூக விழுமியங்களும், அதீதமான சுதந்திரப் போக்கும் சிறு வயதிலேயே எமது பிள்ளைகளைத் தவறான பாதையில் இட்டுச் செல்கின்றன.

# How old is old enough

இவற்றைவிடப் பலவிதமான பயங்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் தான் இன்றைய இளம் தலைமுறையினர் வாழ்கின்றனர். போதைப் பொருட்கள், பாலியல் நோய்கள், கற்பழிப்புகள், கருச் சிதைவுகள், வன்செயல்கள், தற்கொலைகள், நகர்ப்புற வன்முறைகள் (Urbon Crime), வேலையில்லாத் திண்டாட்டம், படித்த படிப்பிற்கேற்ற தொழில் கிடையாமை முதலிய பல பயங்களால் இன்றைய இளம் தலைமுறையினர் சூழப்பட்டுள்ளனர். சாவதானமாக வாழும் சூழல் (Relaxing atmosphere) எந்த ஒரு வயதினருக்கும் கிடையாது. அமைதியான வாழ்க்கையோ, எளிமையான (simplicity) வாழ்க்கையோ இவர்களிடம் காணப்படவில்லை. இவர்களின் தேவைகளுக்கும், ஆசைகளுக்கும் உச்ச வரம்பே கிடையாது. இவர்களின் வாழ்க்கையில் அர்த்தங்கள் குறைவாகவும் (Less meaning), மனத் தாக்கங்கள் கூடவாகவும் (more stress) உள்ளது. மனம் விட்டுப் பேசுவதற்கோ, அன்போடு போய் வருவதற்கோ இனபந்துக்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. ஒத்த குழுக்களே இவர்களின் இனபந்துக்களாக அமைகின்றன.

பெற்றோராகிய நாம் இவர்களின் வயதில் அனுபவிக்காத பல கஷ்டங்களை இன்றைய தலைமுறையினர் எதிர் நோக்குகின்றனர். பெற்றோர்கள் கட்டுப்பாட்டைப் பொறுத்தமட்டில் தங்கள் கைகளைக் கட்டிப் போட்ட மாதிரி இருப்பதாகக் கருதுகின்றனர். முதலில் பெற்றோர் கட்டிளமைப் பருவம் ஒரு கடினமான காலகட்டம் என்பதை உணருதல் வேண்டும். அடுத்து நாம் வாழ்ந்த அமைதியான, எளிமையான சூழலில் இங்கு எம் பிள்ளைகள் வாழவில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். பிறந்த நாட்டு விழுமியங்களைக் கொண்ட வீட்டுச் சூழலிலும் பார்க்கப் புகுந்த நாட்டு விழுமியங்களைக் கொண்ட புறச் சூழலிலேயே பிள்ளைகள் அதிகநேரம் வாழ்கிறார்கள். ஆகவே புகுந்த நாட்டு விழுமியங்களின் தாக்கம் தான் அதிகமாக இருக்கப் போகிறது.

எந்த ஒரு இனத்திலும் முதலாம் தலைமுறையினர் தங்களுக்குக் கிடைக்காத நல்ல வேலை வாய்ப்புகள் தங்கள் பிள்ளைகளுக்காவது கிடைக்க வேண்டுமே என்ற ஏக்கத்தினால், தாங்கள் மாடாக உழைத்து, பிள்ளைகளைப் படிப்பதற்கு வசதி செய்து கொடுப்பதாகக் கருதி மிகவும் சொகுசாக வளர்க்கிறார்கள். இதனால் பிள்ளைகளுக்குப் பணத்தின் பெறுமதியும் தெரிவதில்லை, பெற்றோர் படும் கஷ்டங்களும் விளங்குவதில்லை. பிள்ளைகளைச் சிறு வயதிலிருந்தே பொறுப்புக்களைக் கையாளப் பழக்க வேண்டும். பிள்ளைகளை மதிப்புடன் நடத்தி, அவர்கள் மேல் நாம் நம்பிக்கை வைத்திருப்பதை அடிக்கடி நினைவூட்டுதல் வேண்டும்.

இங்கு வாழும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் பேச்சுத் தொடர்பு மிகவும் குறைவாகவே (Communication Gap) காணப்படுகிறது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் வாக்குவாதம் அல்லது மௌனம் என்ற நிலையே பெரும்பாலான வீடுகளில் காணப்படுகிறது. "தோளுக்கு மிஞ்சினால் தோழன்" என்ற பழமொழி எங்கள் நாட்டிலேயே நிலவியது. பிள்ளைகளுக்கு மதிப்புக் கொடுத்து கலந்துரையாடுதல் பெற்றோரின் வாழ்க்கைத் திறன்களில் ஒன்றாகும். பிள்ளைகளுக்கு ஏற்படும் கஷ்டங்களும், அவமானங்களும் முழுக்குடும்பத்தையுமே கவலையில் ஆழ்த்தும் என்பதை அடிக்கடி நினைவூட்டுதல் அவசியம். சிறு பிழைகளுக்கோ பெரும் பிழைகளுக்கோ மன்னிப்புக் கொடுக்கும் மனப்பான்மையைப் பெற்றோர் வளர்த்துக் கொள்ள வேண்டும். சதா பிள்ளைகளை நச்சரித்தால் வீட்டுச் சூழலையே வெறுக்கத் தொடங்கி விடுவார்கள். ஒத்த குழுக்களின் தாக்கமே இங்குள்ள பிள்ளைகளை அதிகம் பாதிப்பதால், அவர்களின் நண்பர்களைத் தெரிந்து வைத்திருத்தல் அவசியம். நேரத்தோடு அவர்களை கூடாத சகவாசங்களிலிருந்து காப்பாற்றுதல் வேண்டும்.

தொழில் நுட்பம் நிறைந்த இக்கால கட்டத்தைக் கட்டிளமைப் பருவத்தினர் வாழ்வதற்குத் திறமான ஒரு காலம் என்று கணக்கிடும் அதே நேரத்தில், பல விதமான கஷ்டங்களும், பயங்களும் நிறைந்த இந்நாட்டு வாழ்க்கையமைப்பை ஒரு கடினமான காலம் என்றும் கொள்ளல் வேண்டும். இளம் பராயத்தினரை இங்கு வளர்ப்பது ஒரு சவாலாகவே பெற்றோருக்கு அமையப் போகிறது. ஆகவே அன்பும், பொறுமையும் தான் பெற்றோருக்குப் பிள்ளைகளை வளர்க்க தேவைப்படுகின்றன. அவற்றைக் கடைப்பிடித்தால் காலப்போக்கில் இளம் பராயத்தினர் திருந்தி நல்வழியில் செல்வார்கள். அந்த நம்பிக்கையோடு வாழ்வோமாக.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதமே! நின்று கவனி!! செயல்படு!!!

## எழுதியவர்: எஸ்.வெள்ளிங்கிரி

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நிலவும் அன்பில் உதித்த குழந்தையென்னும் முத்தே குடும்பத்தின் சொத்து! குழலும்...யாழும் தரும் இனிய ஓசையல்ல இது. மிகச் சிறந்த ஓசை. குடும்பத்தில் என்றும் கேட்கும் குழந்தையின் மழலைச்சொல்லே சிறந்த ஓசை. இதைக் கேட்டிராதவர்களே குழலையும் யாழையும் இனிய ஓசையென்பர் என்று பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் கூறுகின்றார். அவர் கூற்று என்றும் பொய்யாவதில்லை. ஆகவே தான் அவரைப் பொய்யாமொழிப் புலவர் என்கிறோம். இவர் வரிந்து கட்டிக் கொண்டு குழந்தைக்காகப் பரிந்து பேசுவதெல்லாம் உண்மை. ஆனால், அதை யார் தான் நின்று கவனிக்கிறோம். இவர் மட்டுமல்ல, எத்தனையோ பேர் கூறி விட்டனர். ஆனால் யாரும் அதைப் பற்றி சிந்திப்பதில்லை. அதனால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன.

பெற்ற குழந்தைக்கு நல்ல ஆகாரம் கொடுத்து ஆரோக்கியத்துடன் வளர்க்க வேண்டியது ஒரு தாயின் கடமை. ஆனால் அவள் தன் குழந்தையென்றும் பாராமல் மனிதாபிமானப் பண்பு, தாய்மை இவற்றைப் புதைத்து விட்டுக் குழந்தையை வளர்க்கின்றாள். தாயின் மூலம் தந்தையையும் தந்தையின் மூலம் உலகத்தையும் அறியும் அக் குழந்தைக்கு ஆரம்பமே சரியாக இல்லை. நாம் அழுதால் ஆண்டவனிடம் முறையிடலாம். ஆனால் ஆண்டவனே அழுதால் யாரிடம் போய் முறையிடுவது என்ற கதையாக இருக்கிறது இது.

குழந்தைக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியும், ஆரோக்கியமும் தாய்ப்பாலில் இருந்து தான் அக்குழந்தை பெறுகின்றது. பிறகு அது வளர்ந்து, தான் உண்ணும் உணவில் இருந்து அவற்றைப் பெறுகின்றது. அந்த ஆரோக்கிய உணவைச் சமைத்துக் கொடுப்பதும் தாயே. இது எல்லாம் முறைப்படி நடந்து வந்தது ஒரு காலத்தில். இன்று, இதெல்லாம் மாறிப் போய்விட்டது. நாகரீகம் என்று கூறும் குருட்டுத்தனம் மனிதர் வாழ்வில் குடியேறியாகி விட்டது. நல்லதை அடையவே யாரும் விரும்புவதில்லை. அல்லது, நல்லதும் கெட்டதும் தெரிவதில்லை. நாகரீகம், பண்பாடு, ஒழுக்கம் இதெல்லாம் சிதைந்து அதற்குப் புது வடிவம் கொடுக்கப்படுகின்றது. அநாகரீகம் இன்று நாகரீகமாக மாறிவிட்டது. அன்று தவறாக இருந்தது இன்று சரியானதென்று வாதிடப்படுகிறது. அதனை வாழ்வில் கைக்கொள்ளவும் செய்கிறோம். இதற்குப் பல எடுத்துக்காட்டுகளை உதாரணமாகக் காட்ட முடியும்.

அதிலொன்று தான், குழந்தைக்குத் தாய் பால் கொடுக்காத செயல். இந்தச் செயல் இன்று பலராலும் வரவேற்கப்படுகின்றது. உலகத்தில் பரவலாகவும் இது நியாயம் என்று கற்பிக்கப் படுகின்றது. இதற்குக் காரணம்: தாய்ப் பாலுக்கு நிகரான ஊட்டச் சத்துக்களைப் புட்டியில் ஊற்றிக் கொடுத்தாலே போதும், தாய்ப்பாலுக்கு நிகராகி விடும், நமக்கும் சிரமம் இல்லையென்று தாய்மார்கள் சிலர் எண்ணுகிறார்கள். அவர்கள் அத்தோடு மட்டும் நிற்கவில்லை. தாய்ப்பால் கொடுத்தால் அது தன்னுடைய உடலைப் பாதிக்கும் என்றும் கட்டுடல் கட்டுக் குலைந்து அழகு கெட்டுவிடும் என்றும் நினைக்கும் இவர்கள், குறிப்பிட்ட மாதத்திற்கு மேல் குழந்தைக்குப் பால் கொடுப்பது அநாகரீகம் என்றும் எண்ணுகிறார்கள். தாய்ப்பால் கொடுப்பதால் விரைவிலேயே முதுமை வந்து இளமையிலேயே மூப்புடன் வாழநேரிடும் என்று நினைப்பதுடன் நில்லாது, கேளிக்கை விருந்துகளுக்குப் போகும்போது 'அதோ குழந்தை பெற்றும் பார்! அவள் உடல் சிக்கென்று இருக்கிறது' என அடுத்தவர்களின் பாராட்டு தல்களை பெறவேண்டி புனிதமான தாய்மையை அடகு வைக்கின்றனர்.

தாய்மார்களே! உங்கள் உடல் மூலம் சுமந்து பெற்ற குழந்தைக்கு, நீங்கள் பத்து மாதம் சுமந்து பிரசவ வலி பெற்றுப் பெற்றெடுத்த உங்கள் குழந்தைக்கு நீங்கள் ஏன் தாய்ப்பால் கொடுக்க குறுகிய காலக்கெடு நிர்ணயிக்கின்றீர்கள்? சிலர் கொடுக்கவும் மறுப்பது ஏன்? குழந்தை பெறும்போதே உங்களுக்குத் தெரியுமல்லவா, குழந்தை பிறந்தால் பால் கொடுக்கவேண்டுமென்று. பிறகு ஏன் பெற்றீர்கள்? பெற்றபின் கொடுக்காமல் இருக்கின்றீர்கள்? பெண்களுக்கு இரண்டு ஜென்மம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒன்று தான் பிறந்ததும் துவங்குகிறது. மற்றொன்று அவள் ஒரு குழந்தையைப் பெற்றதும் துவங்குகிறது. உங்கள் உடல் சிக்கென்று இருக்கவேண்டித் தாய்ப்பாலை நிறுத்தாதீர்கள். அந்த இரண்டாம் ஜென்மத்தில் பாவத்தைப் புரியாதீர்கள்.

பிரசவம் ஆனதும் உடலில் மாற்றம் இருக்கும். அது இயற்கை. அதைத் தடுத்து நிறுத்தவேண்டாம். அது தானாகவே பழைய நிலைக்கு வந்துவிடும். அந்தக் கட்டுக்கோப்பான உடலைப்பெற வேண்டுமானால், யோகாசனம் செய்யுங்கள். யோகாசனம் செய்வதால் குழந்தை பெற்ற தாய்மாருக்கு இடுப்பில் சதை பிடிக்காமல் கொழுப்புகள் கரைக்கப்படுவதாக மருத்துவக் குறிப்புகள் கூறுகின்றன. ஆகவே பழைய உடலைப் பெற யோகாசனம் செய்வதுடன், உங்களுக்குத் தேவையான உணவைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிடுங்கள். அதை விடுத்து, சிக்கென்ற கொடி உடலைப் பெறவேண்டித் தாய்ப்பாலை நிறுத்திவிடாதீர்கள். அடுத்தவர் உங்களைப் பாராட்டும் பாராட்டு மொழிகள் சில நாளைக்குத் தான் நிலைத்து நிற்கும். நீங்கள் தாய்ப்பால் கொடுக்காமல் இருந்தால் அதைத் தெரிந்தவர்கள் வசை தான் பாடுவார்கள். அத்தோடு அது தாய்மையும் ஆகாது. இதற்கு நீங்கள் குழந்தை பெறாமலேயே இருந்திருக்கலாம்.

> தாய்ப்பால் அல்லவா மனித
> குலத்தின் அமுது.
> அதைத் தாயிடம் பெறாமல்
> குழந்தை வேறு எங்கே
> பெறும்?

குழந்தைக்குப் பால் கொடுக்கும் பொழுது, மார்பின் இளம் சூடும் தாயின் இருதயத் துடிப்பும் குழந்தைக்கு மருந்தாகவும் குழந்தை ஆரோக்கியமாக வளரவும் உதவுகிறது. ஆகவே பால் கொடுக்கும் போது, குழந்தைக்கு பாலோடு மேற் சொன்னவையும் கிடைக்கிறது எனும் போது

நீங்கள் ஏன் அதை வீணாக்குகின்றீர்கள்? அதற்கும் மேலாகத் தாயின் அன்பும் அந்த அரவணைப்பும் எதனோடு ஒப்பிட்டுக் கூறமுடியும்? தாயான நீங்கள் குழந்தைக்குக் காட்டும் புனிதமான அன்பு, நீங்கள் பால் கொடுக்கும் நேரத்தில் அல்லவா குழந்தைக்குப் பரிபூரணமாகக் கிடைக்கின்றது. தனிமையில் நல்ல காற்றோட்டமுள்ள அறையில் மிருதுவான துணியால் குழந்தையை அள்ளியெடுத்து, அன்புடன் மனித குலத்தின் அமுதான தாய்ப்பாலைக் கொடுங்கள். உங்கள் குழந்தைக்கு நீங்கள் தான் கொடுக்கவேண்டும். அதைக் கொடுக்கக் கால வரம்பு எல்லாம் நிர்ணயிக்காதீர்கள்.

உங்கள் மருத்துவர் சொல்வதைக் கேட்டு நடவுங்கள். குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்த உணவு. தாய்ப் பாலை நிறுத்தி விட்டு அதற்குப் பதிலாக கடையில் விற்கும் ஊட்டச் சத்துக்கள் புட்டியில் அடைத்துக் கொடுப்பதால் குழந்தைக்கு ஆரோக்கியம் தடைப்படுகின்றது. பால் கொடுப்பது நிற்பதால், மார்பில் சுரக்கும் பாலால் உங்களுக்கும் நோய் ஏற்படும். ஆகவே, குழந்தை தாய் இருவருக்கும் நோய் ஏற்படும் நிலையை நீங்கள் உருவாக்குகிறீர்கள். பாவம்! உங்கள் செயலால் ஒன்றும் தெரியாத குழந்தையும் பாதிக்கப் படுகிறது.

ஒருமுறை தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடல் என்ற மிகப்பெரும் கடலை மேருமலையை மத்தாக வைத்தும், வாசுகி என்ற பாம்பை கயிறாக வைத்தும் கடைந்தனர். அப்பொழுது அமிர்தம் வந்தது. அந்த அமிர்தத்தை உண்போர்க்கு பிறப்பு, இறப்பு, நோய், முதுமை என்பன இல்லையாம். அப்படிப்பட்ட அமிர்தம் நமக்குக் கிடைக்கவில்லை. அது கிடைக்கவும் கிடைக்காது. ஆனால் அந்த அமிர்தத்திற்கு ஈடாக இந்த உலகில் வாழும் மனித குலத்தின் அமிர்தமாகத் தாய்ப்பாலைக் குறிப்பிடலாம். அமிர்தம் போல் உயர்வான அப்பாலை உண்பதால் குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியும், சிறந்த உணவும் கிடைக்கின்றது. புட்டிப் பால், ஊட்டச் சத்து இவையெல்லாம் தாய்ப்பாலுக்கு ஈடாகாது. தாய்ப்பாலுக்கு ஈடாக உலகில் எதுவுமில்லை. ஒரு பயிருக்கு எவ்வளவு தான் தண்ணீர் ஊற்றி வளர்த்தாலும், அது மழை நீரில் வளர்வது போல் ஆக்கமாக வளராது. சாதாரண பயிருக்கே இந்நிலை எனும் போது, மனிதருக்கு---------? நீங்களே நினைத்துப் பார்த்து முடிவு செய்யுங்கள்.

> தாய்ப்பால் குழந்தைக்கு மட்டுமே சொந்தமானது. அதன் மீது அதன் தாயே சொந்தம் கொண்டாடமுடியாது

கிராமத்தில் குழந்தை பிறந்ததும், தாயின் மார்பில் சுரந்து நிற்கும் பாலை, அழுக்குப் பால் என்று அதனை வெளியே எடுத்து விடுவார்கள். ஆனால் அந்தச் சிறு துளி பாலில் தான் நிறைந்த மருத்துவக் குணங்கள் காணப் படுகின்றதாம். ஆகவே அதைக் கட்டாயம் குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். அந்த முதல்பால் அழுக்குப் பால் அல்ல, அது தான் மிகவும் நல்ல சுத்தமான பால் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தைக்குப் போடும் தடுப்பூசிக்குச் சமம் இந்தச் சிலதுளிப் பால் என்பதைத் தவறாக எண்ணி இருப்போரிடம் எடுத்துக் கூறுங்கள். தாய்ப்பாலின் மகத்துவம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு இருந்தாலும், அவர்கள் ஏதோ மாயையில் சிக்கி இருக்கின்றார்கள். அதில் இருந்து வெளியே வரவேண்டும். தாய்ப்பால் குறித்து எடுத்துச் சொல்லி, குழந்தைகளை ஆரோக்கியத்துடன் வளர்க்க வழி செய்ய வேண்டும்.

தாய்ப்பால் அதிகம் சுரக்கும் தாய்மாரிடமிருந்து தாய்ப்பாலை வாங்கித் தாய்ப்பால் கிடைக்காமல் தவிக்கும் குழந்தை களுக்கு வழங்கப் பல சேவை அமைப்புக்கள் தோன்றியுள்ளன. இவற்றிற்கு அரசாங்கம் பல வழியிலும் ஆதரவு கொடுக்க வேண்டும். மக்களும் மற்றப் பொதுநல அமைப்பு களும் இதற்குத் தோள் கொடுத்து இது நல்ல முறையில் இயங்கிட வழிவகுக்க வேண்டும். இந்த அமைப்பின் சேவையானது கடவுளுக்குச் செய்யும் மிக உயர்ந்த சேவையாகும் என்பதை அறிந்து செயற்பட வேண்டும் என்பதை இந்த அமைப்பில் உள்ளவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கூறுகின்றேன்.

தாய்ப்பால் குழந்தைக்கு மட்டுமே சொந்தம். அதைத் திருடக்கூடாது. அதன் மீது அந்தத் தாய்க்கே உரிமையில்லை. அதன் முழுச் சொந்தமும் அக்குழந்தைக்கே உரியது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதன்படி நடக்கவும். மீறினால் அது குற்றம். ஆம். மிகப் பெரிய குற்றமாகும். சுவர் இருந்தாற் தானே சித்திரம் தீட்ட முடியும். உங்கள் குழந்தைகள் நலமுடன் இருந்தாலே உங்களுக்கும் எதிர்காலம்.

ஆகவே, குழந்தைகளை ஆரோக்கியத்துடன் நல்ல முறையில் வளர்ப்பது மிக முக்கியமாகும். மனித குலத்தின் அமுதான தாய்ப்பால் மீது விழிப்புணர்வு வளரவேண்டும். மனித குலம் நவ நாகரீகம் என்று கூறும் அநாகரிகத்தின் மாயையில் இருந்து விடுபட்டு நல்ல பாதையில் போகவேண்டும்.

ஆகவே
மனித குலமே!
நின்று கவனி! செயற்படு!!

**வீடுமாறும்போது, புதியதளபாடம் வாங்கும்போது**

**வாகனம் வாடகைக்கு உண்டு! தொடர்புறுக!!**

**உரிமையாளர்:சி.சிவனேஸ்வரன், தொ.பே.:22199389**

**சிக்குர்ட்ஸ் காத்தா.6, 0650 ஒஸ்லோ**

www.tamilarangam.net

# தாயே...நீயா!!!

**தி. திலீபன்**

கலகலப்பாகப் புலரவேண்டிய மதனின் குடும்பத்தில் காலைப்பொழுது கனத்த சோகத்துடன் புலர்ந்தது. கொஞ்சிவிளையாட வேண்டிய கடசிப்பிஞ்சுக் குழந்தை கத்திக் கொண்டிருக்கிறது.

''இரஞ்சி!!! தங்கச்சி அழுகிறது கேக்கேல்லையோ? நீ மூத்தபிள்ளை..., பதினாறு வயசாச்சு, குடும்பப்பொறுப்பு என்றால் என்ன எண்டு இன்னும் தெரியாது. எங்கடைகாலத்திலை உந்தவயதிலை குடும்பத்திலை பிடிச்சுக் குடுத்திடுவினம். நாளைக்குக் குடும்பம் எண்டு வந்திட்டால் சமைக்கத்தெரியாது, பிள்ளைபாக்கத் தெரியாது... போய் தங்கைகச்சியைத் தூக்கு'' என உரத்தகுரலில் விழுமியங்கள் வீட்டுப்போகும் நிலையைக் கொட்டித்தீர்த்தாள் தாய் (விஜயா)

''தங்கைச்சியவையும் இருக்கினம் தானே எனக்குத்தான் எந்தநேரமும் அரிச்சனை. சமைக்கிறதும், பிள்ளைபராமரிக்கிறதும்தான் பெண்களுக்குத் தொழிலோ? பெண்கள் எல்லாம் விளையாடில் இருந்து விண்வெளி வரையும் ஆண்களுக்குச் சமனாக வீரசாதனைகள் புரியத் தொடங்கி விட்டார்கள். அம்மா நீங்கள் இன்னும் ஆண்களுக்கு அடிமையாக இருக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுப் பெண்ணாகத்தானே இருக்கிறீர்கள்''

எமது சமூகத்தில் மூத்தபிள்ளைகள் எல்லாம் முதுகில் குடும்பாரத்தையும், பெற்றோரின் விரகதாபங்களையும் சுமக்கப்பிறந்தவர்கள் தானே. பின்னால் பிறந்தவர்கள் செய்யும் பிழைகளையும் பெற்றோரின் பிழைகளையும் சேர்த்துத் தண்டனை பெறுவது மூத்தபிள்ளைகள் தான். உபசாரஅறையின்(ஹல்) சாளரத்தருகே சிந்தனையை எங்கோ சிறகடிக்க வீட்டிருந்த தந்தை ''இரஞ்சி'' என கற்சித்தார். காடு அடங்கினால் போல் மயான அமைதி நிலவியது

அமைதியை மெல்லக்கலைக்கிறாள் விஜயா '' இஞ்சருங்கோ கோவிக்காமல் யோசிச்சுச் சொல்லுங்கோ கருவைக்கட்டாயம் கலைச்சுத்தான் ஆகவேணுமே? நாலோடை ஐஞ்சா வளர்த்திட்டுப்போறது''

''நீ சொல்லுவாய் மூத்தவளுக்குக் கல்யாணவயது வந்துவீட்டுது, அவள் பிள்ளைப் பெறுகிற வயதிலை நீ பிள்ளைப் பெத்து வளக்கிறது எண்டால் ஊர் என்ன சொல்லும். நீ சுகமாய் சொல்லிப்போட்டாய் பிறக்கிறதும் பெண்ணாப்பிறந்தால்.....? நீங்கள் சுமக்கிறது பத்து மாதங்கள் மட்டும் தான். நாங்கள் சுமக்கிறது கடசிக் கட்டேலை போகும் வரைக்கும். ரூபாயிலை கேட்ட சீதனம் நாலு, ஐந்து மடங்காக்கி குரோணிலை, டொலரிலை, பவுண்சிலை, ஐரோப்பாக்காசுகளிலை கேட்கினம். இதுகளுக்கெல்லாம் என்னசெய்யுறது''

''இதையெல்லாம் நீங்கள் முதலே யோசித்திருக்க வேணும்.மருந்து மாத்திரை எண்டும் உறைகள் எண்டும் ரீவியிலை வெக்கமில்லாமல் விளம்பரப்படுத்துகிறாங்கள். இதுகளைபெல்லாம் பார்க்காதையுங்கோ. கெ ட்டபடங்களை அடுத்தநாள் வேலை எண்டும் பாராமல் இருந்து பாத்துப்போட்டு சாமம்தாண்டி வந்து என்னை எழுப்புங்கோ........''

''இப்பகதைக்கிற கதையே கதைக்கிறாய் அங்கைபார் கதவுக்கருகிலை இரண்டு கால்கள் தெரியுது''

''இரஞ்சி பெரியவை நாங்கள் கதைக்கிறது உங்களுக்குத் தேவையில்லை. வாய்பாத்த குடி வாழாது எண்டு என்ரை பாட்டி நெடுகலும் சொல்லுவா. கவனிக்கவேண்டியதைப் போய் கவனி'' எனத்தாய் மிரட்டினாள்

புறாவுக்குப் பெட்டியடித்தால்போல் இருக்கும் வீட்டுக்குள் குட்டிக்குட்டி அறைகள் வேறு. பெற்றோரைச்சுற்றித்தான் பிள்ளைகளும் படுத்துத் தூங்குவார்கள். பெற்றோர் தமது அந்தரங்கமான கதைகளை, செயல்களை எப்படி சுதந்ததிரமாக செய்யமுடியும். எமது சமூகம் குடும்பம், கலாச்சாரம், கட்டுப்பாடு, கற்பு எனதம்மைசுற்றிக் கல்லறைகளை எழுப்பி உணவு பூர்வமாய் தானும் வாழ்ந்ததில்லை மற்றவர்களையும் வாழவிட்டதில்லை. தாம்பத்தியம் என்பது கூட தம்பதிகள் தனியாக அனுபவிப்பதற்காக ஆண்டவனால் தரப்பட்ட வரம். இதை எல்லோரையும் கூட வைத்துக்கொண் டா செய்ய முடியும்? சுற்றிவரப் பிள்ளைகள், சுற்றம் சூழல் எனத்தங்குவதற்குப்பலர். திட்டமிடப்படாக் குடும்பம்.விழுமியங்களை இறுகப்பற்றி கொ ள்வதிலும், பணத்தை தேடிக்கொ ள்வதிலுமான அக்கறை, சீர்தூக்கிப்பார்க்கப் ட டாத சிந்தனைகள், தங்கிவாழும் தன்மை, இவற்றுள் கட்டுண்டு திணறும் ஒருசாதாரண தமிழ்குடும்பம் தான் இது.

''எத்தனையோ சனம் பிள்ளை இல்லை எண்டு அழுகுதுகள் நீங்களோ சொந்தப்பிள்ளையைக் கொல்லு எண்டு நிக்கிறியள்.இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் கிடக்கு இப்பவும் நாங்கள் முடிவை மாத்தலாம்.'' விஜயா கணவனின் கண்களைக் குத்தி அவன் இதயத்துள் உண்மையையும் உணர்வுகளையும் தேடினாள்

''முடிவிலை மாற்றம் எதுவும் இல்லை விஜயா....நாங்கள் பார்க்காத பிள்ளை பார்க்காமலே இருக்கட்டும்.இதுவும் பெண் என்றால் ஒன்றும் செய்ய ஏலாது. உப்பிடித்தான் மூன்றாவது பெட்டையாப்பிறக்கேக்கை முத்தமெல்லாம் முத்து எண்டாய். இப்ப நாலுடன் ஐந்து என்கிறாய்.... இல்லை விஜயா கலைக்கத்தான் வேணும்''

''கருக்கலைக் கேக்கை என் உயிருக்கே ஆபத்து வரலாம். பேந்து எல்லா பெட்டைக் குஞ்சுகளையும் நீங்கள் தான் வைத்துப்பார்க்க வேண்டிவரும்.கருக்கலைப்பை, தடுப்பு முறையாக நினைக்கிறியள் போலை கிடக்கு. ஒருபிள்ளை வயிற்றில் உருவாகும் போது உள்ளும், புறமும் என்னுள் ஏற்படும் மாற்றங்களை உங்களால் உணரமுடியாது. உணரவைக்கவும் முடியாது. இஞ்சைபாருங்கோ வயித்திலை உதைக்குமாப்போலை கிடக்குது. என்னைக் கொல்ல போகிறாயா? தாயே!! எண்டு கேட்குமாப் போலை கிடக்கு''

www.tamilarangam.net

''கருவைக்கலைக்காமல் இருக்கிறதுக்கு,இரண்டு மாதத்திலை பிள்ளை உதைக்குது எண்டும் செத்துப்போவன் எண்டும் ஏன் பொய் சொல்லுகிறாய். நீ என்னசொன்னாலும் சரி கருவைக் கலைத்துத்தான் ஆகவேணும் வேறை வழியில்லை''

அவளுக்கு வேறு வழியில்லைத்தான்.வாழவந்து வாயடைத்துப்போனவள். சொந்த உணர்வுகள் செத்துப்போனவள்...இல்லை கலாச்சாரக்கல்லறைகளுக்குள் சாகடிக்கப்பட்ட வள், அடுக்களையும் கட்டிலுமாக காலத்தைக் கழிப்பவள். இவளுக்கு வேறுவழியில்லைத் தான்.

---

ஒன்றரை மணித்தியாலங்களின் பின் மருத்துவமனையில் கருவைக்கலைப்பதற்காய் கணவனும், மனைவியுமாகக் காத்திருக்கிறார்கள். நீண்ட மௌனம்...விடைகாணாக்கேள்வி கள். இந்த மௌனப்போராட்டத்தை மெல்லக்கலைத்தாள் விஜயா.

''இன்னும் அரைமணித்தியாலங்கள் கிடக்கு. இப்பகூட நிப்பாட்டலாம்...என்ன சொல்லுறியள்.... சொல்லுங்கோவனப்பா...மரம் மாதிரி இருக்கிறியள் என்ரை குடும்பத்திலை என்னைத்தவிர பொம்பிளைப்பிள்ளையள் கிடையாது. உங்களுக்கு சகோதரிகளே கிடையாது எங்களுக்குத் தான் ஆண்டவன் ஏன் இப்படி பெட்டை பெட்டையா கொட்டித்தள்ளுகிறானோ தெரியாது''

மனைவின் பக்கம் திரும்பி முறைத்துப்பார்த்தபடி பல்லை நெருடிக்கொண்டு

''முடிவிலை மாற்றம் கிடையாது. அக்கம்பக்கத்திலை ஆட்கள் இருக்கினம். மைக்குப்போட்டுக் கதை நாளைக்கு ரோடடிலை நடக்கேலாது.அந்தத்தூமையைக் கொண்டு போய் துடைச்செறி ஞ்சு போட்டு வா மறுபேச்சு வேண்டாம்'' எனமறுபக்கம் திரும்பிக்கொண்டான்.

ஊருக்காக, உலகுக்காக என பொய் வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து முடிக்கும் இந்த வீழு மியத்தொடர் என்று அறுக்கப்படும்? கண்ணீர் முத்துக்கள் கரைந்தோடி வார்த்தைகளை வெளி வீடாது அவள் வாயை ஒட்டிக்கொண்டன.இந்தமௌனப்போராட்டத்தை மெல்லக்கலைத்தது அந்த அழைப்பு

''விஜயா மன்மதகோபன்,... விஜயா மன்மதகோபன்''

கல் போல் இருந்த கணவனை பரிதாபத்துடனும், ஏக்கத்துடனும் திரும்பித்திரும்பிப் பார்த்தபடி போகிறாள். மன்மதகோபனின் மன்மதலீலைகளுக்கு அடிமையாகி ஆணாதிக்க வீழு மிய விலங்கிட்டவள் தன் பிள்ளையையே கொல்லக் கொலைக்களத்துக்குக கொண்டு போகி றாள். கடசியாக சத்திரசிகிச்சை அறையுள் நுழையும் போது கூட ஒருதடவை திரும்பிப்பார்க்கி றாள்.அந்தப்பார்வை கெஞ்சுகிறது அவன் முடிவில் மாற்றம் இருக்காதா?..கல்நெஞ்சம் கரை யாதா? அந்தப்பார்வைக்குள் எத்தனை கேள்விகள். கண்ணீரால் தன்வயிற்றைக் கழுவியபடி

''என்னை மன்னித்து விடு...என்மகளே!!! என்னை மன்னித்து விடு'' என்று மன்றாடிக்கொண்டு டாக்டர் எனப்பட்டம் பெற்றுக் கத்தியுடன் நிற்குள் கொலைகாரக் கூட்டத்தினுள் நுழைந்தாள் மயக்க மருந்து ஏற்றப்படுகிறது.அவள் வயிற்றில் இருப்பது மகள் என்பதை உள்ளுணர்வு உணர் த்தியது. ''மகளே என்னை மன்னித்து விடு....மகளே!! என்னை மன்னித்துவிடு..என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாள். மயக்க ஊசி வேலைசெய்ய அவள் குரல் ஒடுங்கி, ஓய்ந்து , அடங்கு கிறது.

மனைவியின் வருகைக்காய் காத்திருக்கும் கணவனின் மனதில் ஒரு பயம். மனைவின் அந்தக்கடசிப்பார்வை அவனைச் சித்திரவதை, செய்தது. மனச்சாட்சி கேட்கத் தொடங்குகி றது.

''நீ ஓர் கொலைகாரன்... கொலைக்கு உத்தரவிட்ட கொலைகாரன்''

''கண்காணாதை...நான் செய்யாததை எப்படிக்கொலை என்பாய்''

''குழந்தையை உருவாக்க மூலமும் முதலுமாய் இருந்தவன் நீ. சொந்தப்பிள்ளையையே கொலை செய்யத்துணிந்த நீ எந்தக் கொலையையும் செய்வாய். கொலை வெறிபிடித்த பாத கனே போ..போய் தடு...ஆண் என்றால் வளர்க்கத் தயாராக இருக்கும் நீ பெண் பிள்ளையாய் இரு க்கும் என்று கொல்லத் துணிந்து விட்டாய். நிறுத்து அந்தக்கொலையை நிறுத்து''

பிரமைபிடித்தவன் போல் சுற்றுமுற்றும் பார்க்கிறான். எல்லோரும் அவனைப்பார்ப்பது போன்று உணர்ந்தான். மெல்ல எழுந்தவன் மீண்டும் அமர்ந்து கொண்டான்.

''என் ஒவ்வொருகுழந்தையும் ஆண்குழந்தை எண்டு சாத்திரம் சொன்னாலும் எனக்குப் பிறந்த அனைத்தும் பெண்குழந்தைகள் தானே''

''பெண்குழந்தையாய் இருக்கட்டுமே அதில் என்ன தவறு. ஆண்மாதிரி வளர்த்துவிடு சீதனம் கொடுக்கமாட்டேன் என்று சபதம் எடுத்துக்கொள். அழகு என்பதை அள்ளிவைத்திருக்கும் பிள்ளைகளுக்கு எதற்கடா சீதனம்.அந்த அழகும் அன்பும் தானடா சீதனம்.உன்பெண்களை உன்மனையாள் போலல்லாது சுயமாகச் சிந்திப்பவர்களாக, எந்தமுடிவையும் சுயமாக எடுக்க க்கூடியவர்களாக, தமது தேவைகளை தாமே பூர்த்தி செய்யக்கூடியவர்களாக, புத்திசாலிகளாக, தங்கிவாழத்தன்மையில்லாதவர்களாக, ஏமாற்றுக்கு எடுபடாதவர்களாக, அன்புள்ளவர்களாக வாழ்வை இரசிக்கப்பழக்கு. ஆண்உலகம் அவள்காலடியில் அடங்கிக் கிடக்கும்.சீதனம் சிதறி ப்போகும்.''

''அப்படி ஒருவரும் இவர்களைக் கல்யாணம் கட்ட வராவிட்டால்''

''மடையா!!!கல்யாணம் கட்டியவர்கள் மட்டும்தான் வாழ்கிறார்களா? உனது மனைவி வாழ்கி றாளா? அவளை வாழத்தான் விட்டாயா? கட்டிலில் மட்டும் கட்டிக்கொள்வதற்கான தயாரிப்புத் தான் கல்யாணம் என்றால் [illegible]

www.tamilarangam.net

பத்திரிகை, மோதிரம், ஐயர், போதகர், இமாம், தாலி இவைகள் எல்லாம் தேவையுமிலலை இவை யனைத்தும் சமூகத்தில் உங்களைக் காட்டிக் கொள்ளும் வடிவங்களே தவிர இவைதான் வாழ் கையல்ல. மனிதத்தை மதிக்கப்பழக்கு, அன்பாய் இருக்கப்பழக்கு''

''எல்லாத்தையும் பழக்கலாம், எப்படி அன்பாய் இருக்கப்பழக்கிறது.''

''முதலில் நீ அன்பாய் இரு. பிள்ளைகளைத் திருத்துகிறாய் என்று அடி, உதை போடாதே. பிரச் சனைகளை இருந்து கதைத்து விழங்கப்படுத்து. கதைத்துத்தீர்க்கும் பழக்கமோ, கலாச்சா ரமோ என்றும் உங்களிடம் இருந்ததில்லையே. காசு மட்டும் வாழ்கையாகாது பிள்ளைகளுடன் இருப்பதற்கு என நேரத்தை ஒதுக்கு''

'' இப்ப என்ன செய்யச்சொல்கிறாய்''

''உன்பிள்ளையைக் கொலை செய்ய அனுப்பிவிட்டு என்னையாடா கேட்கிறாய் பாதகா! நிறுத்து சிசுக்கொலையை நிறுத்து போ...போ''

பித்துப்பிடித்தவன் போல மதன் ஒடுகிறான்''நிறுத்துங்கள்.....கொலையை நிறுத்துங் கள்''சமூகம், சுற்றி நிற்போர்யாரையும் அவன் கவனிக்கவில்லை. வெறிகொண்டு சத்திர சிகிச் சை செய்யும் அறைக் கதவை உடைக்க முயல்கிறான். வாயில் காவலர்களால் நிறுத்தப் பட்டு மீண்டும் பழைய இடத்தில் கொண்டுவந்து இருத்தப்படுகிறான்

---

அம்மா!!!

பாசம், பரிவு, நேசம், உறவு, உணர்வு, அன்பு எல்லாமே ஒன்றாக அமைந்ததால் தானே அம்மா என்று அழைத்து, ஆண்டவன் தாயின் வயிற்றில் பிள்ளைகளை வளரவிடுகிறான். இப்படிப் பெருமைக்குரிய தாயே நீ பேயாகலாமா? ஆக்கும் சக்தியைக் கொண்டவளே உன்சிசுவை அழி ப்பதற்கு உடன் பட்டாயோ? நான் செய்த பாவம் என்ன தாயே? உன் உதிரத்தில் உருவானதா? உன்னைப்பார்க்கத் துடித்ததா? உன்னுடன் வாழநினைத்ததா? சொல் தாயே சொல். இரக்க மில்லா அரக்கியாக மாறியது ஏன்?

நீ சிரிக்கும் போது சிரிக்கிறேன். நீ அழும்போது அழுகிறேன். உன் இன்பதுன்பங்களில் உணர்வுகளில் ஒன்றி உறவாடும் என்னை அழிக்க நினைக்கிறாயே அம்மா!!!. மாசற்றவள் மாதா என்றார்களே நீ மாசுபடலாமா? தன் ஊனுக்கும், உதரத்துக்கும் உணவில்லாமல் விட்டாலும் உதிரத்தையே உருக்கி பாலாய் ஊற்றும் உத்தமித்தாயே என்னையேன் கொல்ல முயன்றாய். தாய்மை என்ற புனிதம் பூவுலகில் இல்லாவிடில் பேயும், பூதமும் வாழும் நரகக்கூடாகத்தான் பூமி இருந்திருக்கும். நீயோ தாய்மையையே கொல்ல முயன்றாயே தாயே.ஏன்...ஏன்?

என்முகத்தைப் பாராமல் அரும்பிலே அறுத்தெறிய நினைக்கும் அன்னையே கேள்!!! விதைப்பதில் ஏற்படும் விந்தையான இன்பத்துடன் தந்தையின் தயவு முடிந்து விடுகிறது. எம்மை வாங்கி, தாங்கி, பொறுமையில் ஓங்கி உணர்வுளின் விளைநிலமாகவும், கருவின் விதை நிலமாக வும் நிற்பவள் தாயல்லவோ

உன்னைத் தூய்மையானவள் என்றார்களே தாயே அதனால் தானா என்னை''தூமை'' என்று துடைத்தெறிய வந்தாய்.....சொல் தாயே... சொல். பழைய உறவைத் புதுப்பிக்க வந்த என்னை நன்றியே இல்லாது வாசலில் வைத்தே கொலை செய்ய நினைத்தாயே, உனக்கு எப்படி மனம் வந்தது. கொடிய விலங்குகளுக்கில்லாத கொலை வெறி உனக்கு எப்படி வந்தது. தாயே நீ அனுப்பிய கொலைக்கருவிகள் என்னை நோக்கி வருகின்றன. இதை நிறுத்தமாட்டாயா?... மாட்டாய் நீ செய்யவே மாட்டாய். அடிமை விலங்குக்குள் அடிபட்டுக்கிடக்கும் நீ நிறுத்த மாட் டாய். தாயே நான் போகப் போகிறேன்.மீண்டும் பிறப்பு என்பது உண்டு என்றால் ...நீ வந்து என் வயிற்றில் பிற அன்பு, பாசம், பரிவு, நேசம், கருணை, இரக்கம், தயவு, தாட்சணியம் என்ன என்பது புரியும். அதோ என்கழுத்தைக் கத்தரிப்பதற்கு நீ அனுப்பிய கத்திகளும், கருவிகளும் வந்து விட்டன நான் போகிறேன் உன்வரவுக்காய் என்றும் அன்போடு காத்திருப்பேன். வா...வந்து என்வயிற் றில் பிற

இப்படிக்கு
உன்வயிற்றில் இருந்து பிரசவமாகாது, சவமான புத்திரி

குழந்தை கொல்லப்படும் போது கத்துகிறது
ஐ யோ......அ ம் மா!!!..அ ம் மா!!!..அ ம் மா!!!

---

அம்மா என்ற குழந்தையின் குரல் அவளினுள் ஓங்கி எழுந்தது ''ஐயோ என்பிள்ளையைக் கொல்லாதீர்கள்....என்பிள்ளையைக் கொல்லாதீர்கள். நான் கொலைகாரி இல்லை...நான் கொ லைகாரியில்லை'' எனக்கத்திக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள். அவளது குரல் மருத் துவமனையின் சுவரெங்கும் எதிரொலித்து ஓய்ந்தது. இது கனவா, நினைவா என்பது அவளுக்கு புரியவில்லை.''எங்கே என்பிள்ளை ...எங்கே என்பிள்ளை'' எங்கோ இருந்து ஓடி வந்த தாதியர் சொன்னார்கள்

''காலம் கடந்து விட்டது..தற்போது தங்கள் முடிவு தாமதமானது, போனபிள்ளை போனதுதான் இப்போது நீங்கள் இருப்பது ஓய்வெடுக்கும் இடம். மனத்தை அலட்டிக்கொள்ளாமல் படுங்கோ. எல்லாவற்றையும் மறந்து விடுங்கோ''

மறப்பதா? இப்பதானே நினைக்கவே ஆரம்பிக்கிறாள்.அமைதியா? அமைதியை அழிந்த தே இங்கு தானே.யாருக்குமோ கேட்காத அந்த குழந்தையின் குரல் அவளுக்குள் கேட்டுக் கொண்டு இருக்கிறது.யாருக்குமே எழுதப்ப டாத கடிதம் அவள் இதயத்தில் ஆழமாக எழுத ப்பட்டிருக்கிறது.பெத்துப்பார்க்காத புத்திரியைத் தேடி இத்தாய் போகும் வரை அக்குழந்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நானே கடவுளாக....( சிறுகதை)

எழுதியவர்: விஜயலட்சுமி சிவா

மூன்று நாட்களாக என் 7 வயது மகளின் நடவடிக்கை சரியில்லை. அங்குமிங்கும் குடுகுடுவென்று ஓடிக்கொண்டு, எப்போதும் துறுதுறு வென்றிருப்பாள். படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. அன்றைய பள்ளிப்பாடங்களை அன்றைக்கே படிப்பதோடு மட்டுமில்லாமல், மறுநாள் பாடங்களையும் முதல் நாளே படித்து விடுவாள். ஆசிரியர் அவளைப் பாராட்டவேண்டும் என்பதில் எப்பொழுதும் குறியாக இருப்பாள். எல்லாவற்றிலும் முதல் மார்க் வாங்கவேண்டும் என்பதில் மிக கவனம். எந்த நேரமும் தொணதொணவென்று ஏதாவது பேசிக்கொண்டும், கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டும் இருப்பாள். அப்படிப்பட்டவள் இந்த மூன்று நாட்களாக அமைதியாக, ஒரு விதமான பயப் பார்வையில் இருப்பதாகப்பட்டது.

தோழி ஜனனியுடன் சண்டை போட்டிருப்பாளா...? இல்லை... எந்தப் பாடத்திலாவது மார்க் குறைத்து வாங்கியிருப்பாளோ....? அப்படித் தெரியவில்லையே. என்னவாக இருக்கும்...? என் மகளைக் கூப்பிட்டுக் கேட்பது என்று முடிவு செய்தேன்.

“பைரவி... ” கூப்பிட்டேன்.

என்னம்மா என்று ஓடி வருபவள், அமைதியாக வந்தாள். புன்சிரிப்புடன் அவளைத் தூக்கி என் மடியில் வைத்தேன்.

“ என்ன... என் செல்லம் ஒரு மாதிரியா இருக்குது” என்றேன்.

பேசாமல் இருந்தாள்.

“என்ன குட்டிம்மா, என்ன நடந்தது..... ஜனனியுடன் சண்டையா?”

“....................”

“அம்மாகிட்டச் சொல்லுடா” கொஞ்சினேன்.

“....................”

“மார்க் எதுவும் குறைவா வாங்கியிருக்கியா?”

“....................”

என்னவாயிற்று என் செல்லத்திற்கு......என்னிடம் இதுவரை இவ்வளவு அமைதியாக இருந்ததில்லையே, என் மனசுக்குள் லேசான பதட்டம் வந்தது. ஒருவேளை..... உடம்புக்கு எதுவும் செய்கிறதோ.....? தொட்டுப் பார்த்தேன். அப்படி ஒன்றும் தெரியவில்லை. ஆனால்..... நேராக என்னைப் பார்ப்பதைத் தவிர்க்கிறாள். இதுவரை இவளை இப்படி நான் பார்த்ததில்லை. வீட்டில் உள்ள அனைவருக்கும் இவள் செல்லம், அதிக செல்லம்.

என் மகன் பிறந்ததற்குப் பிறகு, ஏனோ பத்து வருடங்கள் குழந்தையில்லாமல் இருந்தேன். தவம் இருந்து பெற்ற பிள்ளை போல், எத்தனை எத்தனையோ கோயில், குளம் சுற்றி........ பெண் குழந்தையில்லாமல் பட்ட வேதனைகளுக்குப் பலன் போல..., ரோஜா மொட்டுப் போல் இவள் பிறந்தாள். குண்டு கண்களும், குண்டு கன்னங்களுமாக... அத்தனை அழகு. என் கணவரைப் போல் என்று பலர் சொன்னார்கள். என் மகனுக்கு தங்கை மீது மிகவும் பிரியம். தங்கையை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்வான். அவன் இந்த 2 நாட்களாக வீட்டில் இல்லை, டூர் போயிருக்கிறான். சிலவேளை... அது தான் தனிமையாக உணர்கிறாளோ? என் கணவரும் இங்கு இல்லை, அவருக்கு திருச்சியில் ஆசிரியர் வேலை..., எனக்கு இங்கு மதுரையில் ஆசிரியர் வேலை. அவர் வாரம் ஒருமுறை தான் வந்து செல்வார். அந்த நேரங்களில் பைரவிக்குட்டி அப்பாவின் தோளை விட்டு இறங்கமாட்டாள். இப்பொழுது இவளின் மௌனம், தனிமையின் காரணமாகத் தான் இருக்கவேண்டும். என் மனம் சமாதானம் அடைய முயன்றது.

“பைரவிக்குட்டி, அண்ணன் இன்னிக்கு வந்துருவான்... பைரவிக்கு நிறைய பொம்மை, பிஸ்கட்ஸ் எல்லாம் வாங்கிட்டு வருவான். கார்த்தி அண்ணாவுக்கு பைரவி பாப்பா மேலே ரொம்ப பிரியம்ல... ” என்று கொஞ்சினேன் என் மகளை.

அவள் முகத்தைப் பார்த்தேன். கொஞ்சம் கூட சந்தோஷம் தெரியவில்லை. மாறாக அவள் கண்களில் சின்ன நடுக்கம் தெரிந்தது. இப்பொழுது என் வயிற்றுக்குள் ஏதோ ஒன்று உறுத்தியது. எங்கோ, ஏதோ தவறு நடந்திருப்பதாக ஒரு உணர்வு சொல்லியது.

“பைரவிக்கண்ணு, அம்மாகிட்ட எதுவும் மறைக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல, அம்மா தான் உன்னை எப்பவுமே திட்டினதில்லையே.... அம்மாகிட்ட பயப்படாம சொல்லுடா....” மிக அன்பாகக் கேட்டேன்.

“அம்....மா, அ....ம்மா....ம் ....மா ”

“சொல்லு குட்டிம்மா.... ”

“அம்மா, அண்ணன் கூட அந்த மணி அண்ணனும் வருமா? ”

மணி.... என் மகனின் நண்பன். என் மகனை விட 3 வயது பெரியவன். என் மகனைப் போல, மிக நல்ல பையன். எனக்கு நல்ல உதவிகள் செய்பவன். இவள் மேல் அவனுக்கு பிரியம்..... இவளை கடைக்கு, வீட்டுக்கு என்று தூக்கிக்கொண்டு திரிவான்.

“ஏன் குட்டி கேக்குற.... சிலவேளை வரலாம் ”

“அம்...மா, எனக்கு அந்த மணி அண்ணனை பிடிக்கலைமா”

“ஏன் குட்டிம்மா பிடிக்கலை..... பாப்பாவை திட்டினானா? ”

“இல்லம்மா.... ”

“அடிச்தானா பாப்பாவை....ம்...? ”

“இல்லம்மா....

“அப்ப ஏண்டா பிடிக்கலை....? ”

www.tamilarangam.net

"தெரியலம்மா........ பயமாயிருக்கு...." என்று சொல்லிக் கொண்டே என்னை இறுகக் கட்டிப்பிடித்தாள். அவளின் பிடியில் அவள் கை நடுக்கத்தை உணர்ந்தேன். என் மனதின் அபாய மணி ஒலித்தது.

"பைரவிக்கண்ணு, அம்மா இருக்கும்போது என்ன பயம் உனக்கு.... அம்மா உன் கூடத்தானே எப்பவும் இருக்கேன்....பயப்படக் கூடாதுடா, அம்மாகிட்டச் சொல்லு.... மணி அண்ணா என்ன செய்தான் உன்னை.... சொல்லு குட்டி...." பாதுகாப்பான உணர்வைக் கொடுத்து அன்பாகக் கேட்டேன்.

"............"

"சொல்லு கண்ணு"

திக்கித் திணறி அந்த மழலை வாயிலிருந்து வந்த ஒவ்வொரு வார்த்தைகளும் என் நெஞ்சத்தை சுத்தியல் கொண்டு உடைத்துக் கொண்டிருந்தது. 'கடவுளே....கடவுளே இது.... நிஜமா? அய்யோ என் குழந்தை, என் செல்லம்.... என்ன நடந்தது எனப் புரியாமலே இவ்வளவு பயப்பட்டிருக்கிறாளே. மணி! உன்னை என் மகனாக நினைத்து, என் வீட்டில் பழகவிட்டு.... அய்யோ, நீ என்ன மிருகமா.... ஏழு வயது பச்சை மண், சின்ன ஜீவன்.... உன்னை அடித்தே கொன்றால் என்ன.... நீ.... மனிதன் இல்லை.... மிருகம். நீ.... மனித ரூபத்தில் இருக்கும் மிருகம்....' என் கண்ணில் கண்ணீர் துளி எட்டிப் பார்த்தது. என் உணர்ச்சியை என் மகளிடம் காட்டக்கூடாது..... கட்டுப்படுத்த வேண்டும். என் உள்ளம் நெருப்பாகக் கொதிக்கின்றது, அடக்குகின்றேன்.

"பைரவிக்கண்ணு, அம்மா கூடவா. " அவளைக் கூட்டிக் கொண்டு பூஜையறைக்குள் சென்றேன். சுலோகம் பாடும் என் மகளின் வாயிலிருந்து வந்த அந்த வார்த்தைகளை எண்ணியபொழுது நெஞ்சம் அழுதது. நானும், என் மகளும் இறைவனுக்கு முன்னால் அமர்ந்தோம்.

"பைரவி.... அம்மா எப்பொழுதும் ஒன்னு சொல்வேனே.... ஞாபகமிருக்கா? கடவுள் நல்லவர்களைக் காப்பார், தவறு செய்பவர்களுக்கு கடவுள் தண்டனை கொடுப்பார்னு அம்மா சொல்லியிருக்கேன்ல. சாமியைக் கும்பிட்டா, சாமி பைரவிக்குட்டியைப் பாத்துப்பார், பைரவிக்குட்டி பயப்படத் தேவையில்லை....சரியா " என்றேன் நான்.

"சரிம்மா.... " என்று லேசாகப் புன்னகை பூத்தாள்.

நான் ஒரு இறைவன் பாட்டுப் பாடினேன். என் மகளையும் பாடச்சொன்னேன். அழகான குரலில், கணீரென்று அம்மன் பாட்டொன்றைப் பாடினாள். அவள் பாடப்பாட என் மனது சற்றே அமைதியானது. நான் இனி என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று சிந்தித்தேன். மனதிற்குள் திட்டம் உருவானது.

என் மகளை அணைத்துக் கொண்டேன். இருவருமாக வந்து சாப்பிட்டோம், T.V பார்த்தோம். சற்றுநேரத்தில் என் மகள் தூங்கிப் போனாள், என் அணைப்பில். அவள் முகத்தில் ஒரு பாதுகாப்பு உணர்வு தோன்றிவிட்டது போல், பயம் தெளிந்துவிட்டது போல் இருந்தது. அவளைப் பார்க்கப் பார்க்க நான் இவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த அழுகை வந்தது. சத்தமில்லாமல் அழுதேன். 'என் கணவரிடம் இதைச் சொல்வதா.... வேண்டாமா? தாங்கிக் கொள்ளுவாரா.... வேண்டாம், இதை யாருக்கும் சொல்லக்கூடாது.... எனக்குள்ளே இதை புதைத்துவிட வேண்டும்.'

www.tamilarangam.net

என் மகள் விவரித்த அந்தச் சம்பவம் நடந்த நாளை யோசித்தேன். எனக்கு அன்று ஆசிரியர் கூட்டம். என் மகனும், அந்த மணியும் வீட்டில் இருந்தனர், டூர் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தனர். என் மகன் பிஸ்கட் வாங்க கடைக்குச் சென்றானாம், பாப்பாவை மணியுடன் விட்டுவிட்டு. 'பாவி உனக்கு வயசு வித்தியாசம் தெரியவில்லையாடா.... இல்லை.... நீ என்ன பைத்தியமா?.... அந்தச் சின்னப் பிஞ்சை கெடுக்கப் பார்த்தாயா?.... இறைவா.... நீ எங்கிருக்கிறாய்?.... அய்யோ, அந்தச் சின்ன உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்? என்ன நினைத்திருப்பாள்? .... எப்படிப் பயந்திருப்பாள்.... 'மணி அண்ணா வேணாம் ' என்று சொன்னாளாமே.... அண்ணன் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாத மிருகம் நீ.... வயது வித்தியாசம் தெரியாத நீ.... ஒரு மனிதப் பிறவி அல்ல, மிரட்டினாயா என் உயிரை.... சிரித்துக் கொண்டே உலாவும் நீ ஒரு விஷக் கிருமியடா.... என் மகள் தான் முதலாவதா.... இல்லை.... வேறு யாரும் பலியாகி விட்டனரா.... என்னைப் போல் வேறு எந்தத் தாயாவது புலம்பினாளா.... தெரியவில்லையே. மணி என்ற உயிர்க்கொல்லியே, என்னிடம் எப்படி நடித்திருக்கிறாய்?.... அம்மா, பாப்பா.... என்றாயே. அர்த்தம் தெரியாதா உனக்கு?.... ஊமையாக இருந்த பிசாசா நீ ?.... உன்னை.... உன்னை நான் என்ன செய்ய.... உனக்கு.... யார் தண்டனை கொடுக்க.' யோசித்தேன்.... அழுதேன்.... நிம்மதியானேன் இறுதியில்.

மாலை நான்கு மணி போல் என் மகன் வந்தான், கூடவே மணியும் வந்தான். நான் அவனை ஆழமாகப் பார்த்தேன். அந்தக் கண்களில் இருந்த கள்ளத்தனம் அப்பட்டமாகத் தெரிந்தது. என் மகள் நிம்மதியாக உறங்கிக்கொண்டு இருந்தாள். படுக்கையறைக் கதவை சாத்திவிட்டு வெளியில் வந்தேன். அந்த மணி என் மகனோடு சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். பாவம் என் மகன், அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. பாப்பாவுக்கு வாங்கிய பொம்மைகளை என் மகன் காட்டினான். இருவரும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருங்கள் என்று கூறிவிட்டு நான் அடுப்படிக்குச் சென்றேன். அடுப்படி ஜன்னல் கதவை மூடினேன். காஸ் அடுப்பு சிலிண்டர் வால்வைத் திறந்து விட்டேன். 10 ரூபாய் எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தேன்.

" கார்த்திக், போய் சீனி வாங்கிக் கொண்டு வா.... ப்ளீஸ் " என்றேன்.

" இப்பத்தான் வந்தேன் .... அதற்குள்ளாகவா.... ம் .... வா, மணி...." என்று முனகிக் கொண்டே எழுந்தான்.

"மணிக்கு அலுப்பாக இருக்கும், நீ போய் வாங்கிட்டு வா " என்று மணி மேல் அக்கறை இருப்பது போல் கூறினேன்.

"...ப்ச்... " என்று கூறி விட்டுச் சென்றான்.

நான் எதையுமே காட்டிக் கொள்ளவில்லை. 'மணி, இவ்வளவு காலமும் எங்களிடம் எப்படி நடித்திருக்கிறாய்.... நான் சற்று நேரம் உன்னிடம் நடிக்க வேண்டாமா....' முடிவு செய்தேன்.

" என்ன மணி, டூர் எப்படியிருந்தது ? " சிரித்துக் கொண்டே கேட்டேன்.

" நல்லாயிருந்துதும்மா " என்றான்.

www.tamilarangam.net

'நன்றி கெட்ட நாயே! அம்மா என்று சொல்லாதே' என்று மனது கூவியது நிமிடங்களை எண்ணினேன். வால்வு திறந்து விட்டு வந்து சரியாக மூன்று நிமிடம்.

" அப்பாடா ", எனக் கூறிக்கொண்டே காலை நீட்டித் தரையில் உட்கார்ந்தேன்.

" ச்சே! பாலை அடுப்பில் வைத்து விட்டு வருவோமென நினைத்தேன், மறந்துட்டு வந்திட்டேனே.... " என்றேன் நான்.

" நான் போய் வச்சுட்டு வர்ரேன்மா" என்று கூறிக்கொண்டே எழுந்து அடுப்படிக்குச் சென்றான் மணி.

" தேங்க்ஸ் மணி " இதைச் சொல்கையிலே என்னுள் அடக்கி வைத்திருந்த கோட நெருப்பு சுடர் விட ஆரம்பித்தது. நான் மெதுவாக எழுந்து அடுப்படிக் கதவை தாள் போட்டேன். வேண்டுமென்றே T.V சத்தத்தை அதிகமாக்கினேன். என்ன நடக்கும் எனத் தெரிந்தும், ஏனோ எனக்கு அழுகை வந்தது. படுக்கையறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று என் மகளைப் பார்த்தேன், கள்ளாமில்லா முகத்தில் நிம்மதியான உறக்கம். வெளியில் வந்தேன். கதவைச் சாத்தினேன். மணி என்ற அந்த மிருகம் அடுப்படியில் கத்துவது என் காதுகளுக்கு தெளிவாகக் கேட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன், என் மகன் வந்து கொண்டிருந்தான். நான் அடுப்படியை நோக்கி ஓடினேன், என் மகனின் கால் வாசல் படியைத் தாண்டும் பொழுது.

எல்லாம் முடிந்து ஒரு மாதமாயிற்று. என் மகனின் முகத்தில் இன்னும் சோகம் இருக்கின்றது. என் மகள் முகத்தில் பயமின்மை உள்ளது. மணி அண்ணா இறைவனிடம் போய் விட்டார் என்று என் மகளுக்குத் தெரியுமே ஒழிய, எப்படிப் போனார் என்ற உண்மை தெரியவில்லை. அவன் செய்த தப்புக்கு, நான் தண்டனை கொடுத்தது...... சரியா, தப்பா...... எனக்குத் தெரியாது. கடவுள் தண்டனை கொடுப்பாரா...... பெரிய கேள்விக்குறி! சட்டம் அவனுக்குத் தண்டனை கொடுக்கச் சாட்சி வேண்டும். என் மகளின் வாழ்க்கையைச் சாட்சியாக்க எனக்கு விருப்பமில்லை. என் மகளுக்கு கொடுமை இழைத்த குற்றவாளிக்குத் தண்டனை வழங்க நானே கடவுளாக...... நானே சட்டமாக மாறினேன். நான் ஒரு விதத்தில் குற்றவாளியாகவும், ஒரு விதத்தில் நிரபராதியாகவும் உணர்கிறேன். என் மகளைப் பார்க்கும் போதெல்லாம் நான் நிரபராதியாக உணர்கிறேன். நான் பார்க்கும் ஆசிரியத் தொழிலை நினைக்கும் போது, குற்றவாளியாக உணர்கிறேன். புனிதமான தொழிலை குற்றவாளியான நான் செய்யக்கூடாது அல்லவா...... விட்டுவிட்டேன் தொழிலை. நானே கடவுளாக...... நானே சட்டமாக......அந்தக் கடவுள் என்னை மன்னிப்பாராக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**Transporting furnitures , or Moving in Oslo? Call for vehicle!**

**Prop:S.Sivaneswaran, Tel.22199389**

**Sigurdsgt 6,0650 Oslo, Norway**

www.tamilarangam.net

INDIAN

Classic

BASMATI RICE

G&M

The King of Indian Basmati Brands

The "Classic Basmati" rice, is a quality product from India. The best quality paddy is dried and graded, to the precise requirement to get the best grains of Basmati. The long, slender, pearly white and aromatic Basmati rice is the consequence of best milling, polishing and packed to perfection. Our committment to quality is the right way to reach and constantly stay at the top and close to your heart.

MARKETED BY :

UNICO INTERNATIONAL AS

POSTBOKS : 3618, N-3007 DRAMMEN NORWAY TLF : +47-32 70 07 33 FAX : +47-32 70 07 14

SUPPLIED BY :

GILL & MANN
OVERSEAS PRIVATE LIMITED

LUDHIANA (INDIA) PHONE : +91-161-670641 FAX : +91-161-673956

A PRODUCE OF INDIA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர்களுக்கான கதைகள்: ராம். பாஸ்கர்

## யானைக் கதைகள்

உண்மைக்கதைகள் –(பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன)

### கதை:1

முத்தையா பெரிய பண்ணையார். அத்துடன் அவர் விநாயக பக்தரும் கூட. அவர் யானை ஒன்றை செல்லமாய் வளர்த்து வந்தார். இவர் ஒரு சமயம் வடநாட்டு ஸ்தல யாத்திரைக்குச் சென்றிருந்தார்.

அவ்வேளையில், அவரது யானையை பராமரித்து வந்த யானைப்பாகன் அந்த யானைக்கு ஒழுங்காகத் தீனி போடுவதில்லை. தீனி போட்டாலும், தவிட்டில் மணல் போன்றவற்றைக் கலந்து வைப்பது போன்ற தீய வேலைகளைச் செய்து வந்தான். ஆனால், யானைக்கு தீனி ஏராளம் போடுவதாகக் கணக்கெழுதி வந்தான்.

இந்தக் காலம் போல், அக்காலத்தில் நவீன போக்குவரத்து வசதிகள் கிடையாது. வடநாட்டுச் சுற்றுப்பயணம் போனால், திரும்பி வருவதற்கு சிலவேளை ஒரு வருஷம் ஏன் இரண்டு வருஷம் கூட ஆகலாம். அதனைப் பெரிய தனவந்தர்கள் மிகப் பெருமையாக நினைத்த காலம் அது.

காசியில் தங்கியிருந்த பண்ணையார் யானையைப் பற்றி சௌகரியம் விசாரித்து வாரந் தோறும் கடிதம் எழுதுவார். பாகனும் ஏராளம் தீனி வைப்பதாகவும், யானை மிக நன்றாக இருப்பதாகவும் பதில் கடிதம் எழுதினான். பண்ணையார் ஊர் திரும்ப இரண்டு மாதம் இருக்கும் போது, யானையை நன்றாகப் பார்த்துக்கொள் என பாகனுக்கு கடிதம் எழுதினார்.

இங்கே யானை பசியால் மெலிந்து, நோயினால் துன்புற்றுக் கொண்டிருந்தது. அது மிக மிகக் கோபமாயிருந்தது. முதலாளி வந்தால் உண்மை தெரிந்து தனக்கு ஏதாவது தண்டனை தருவார் எனப் பயந்து, யானைக்கு மதம் பிடித்து விட்டது, கிட்டே யாரும் நெருங்க முடியவில்லை என்று பாகன் பண்ணையாருக்கு அறிவித்தான். அதை உண்மை என்று நம்பிய பண்ணையார், யானையைச் சுட்டுக் கொன்றுவிடச் சொல்லி கடிதம் எழுதினார். பாகனும் இதனால் நிம்மதிப் பெருமூச்சு விட்டு, யானையைச் சுட்டுக் கொன்று குழி தோண்டிப் புதைத்து விட்டான்.

இச் சம்பவத்திற்குப் பிறகு, நன்றாக இருந்த பாகனின் மகன் திடீரென்று வலிப்பு நோய் கண்டு இறந்து விட்டான். பாகனுக்கும் கை, கால் வாதம் வந்து உணவைக் கூட அள்ளிச் சாப்பிட முடியாது போனது.

<u>அறிவுரை:</u> ஆகவே, குழந்தைகளே பிராணிகளைப் பட்டினி போடக் கூடாது. அவற்றைத் துன்புறுத்தக் கூடாது. நீங்கள் தும்பிப்பூச்சியைப் பிடித்து வாலில் நூல் கட்டிப் பறக்கவிடும் குழந்தைகளாயிருந்தால், இனி இப்பழக்கத்தை விட்டொழியுங்கள். கருவெளிச்சித்தர் பெருமான் சொன்னபடி நடவுங்கள்

### கதை:2

ஒரு டைலர் (தையல்காரன்) யானை ஊர்வலம் வந்தபோது, வாழைப் பழத்திற்குள் ஊசியை வைத்துக் கொடுத்து விட்டான். யானை வாழைப்பழத்திற்குள் இவன் ஊசி வைத்த விபரத்தை அறிந்து கொண்டது. அதை மனதிற்குள் வைத்திருந்தது.

நல்ல பண்டிகை காலம் அது. ஏராளமான துணிகளை தையற்காரன் தைத்து அழகுக்காக மாட்டியிருந்தான்.

இது தான் சமயமென்று எண்ணிய யானை, குளத்தில் ஏராளமான சேற்று நீரை தும்பிக்கையில் உறிஞ்சியபடி வந்தது. தையற்கடை உள்ளே பீய்ச்சி அடித்தது. எல்லோரும் யானையை அடிக்க ஓடி வர, அது தன் குறட்டில் அடக்கியிருந்த வாழைப் பழத்தை ஊசியுடன் கக்கியது.

ஊர்க்காரர்கள் யாவரும் யானையைப் பாராட்டி தையற்காரனை திட்டிச் சென்றனர்.

# சிற்றி-நகைமாளிகை

புரு காத்தா.12, 0186 ஒஸ்லோ

# CITY JEWELLERY

Brugata.12,0186 Oslo

Tel /Fax: 22.172256

## அன்பான வாடிக்கையாளர்களே!

சிற்றி-நகைமாளிகை,1.12.99 முதல்,புதிய நிர்வாக த்தின் கீழ் இயங்குகிறது. வருக! வருக!!
குழந்தைகள் முதல்,நவநாகரீகநங்கையர் வரை கண்ணைப் பறிக்கும் தங்க நகைகள்!
புத்தம் புது டிசைன்களில் உத்தரவாதத்துடன்!!
சிங்கப்பூர்,துபாய்,லண்டன் போன்ற நாடுகளில் இருந்து தருவித்த 999 பொறித்த ஆபரணங்கள்!
நத்தார்,மிலேனியப்புதுவருடம் முன்னிட்டு விசேட

..........மலிவு விற்பனை!!!

அட்டியல்கள், சங்கிலிகள், வளையல்கள், மூக்கு மின்னிகள், காதணிகள் இன்னும் பற்பல!!!
திருமண,சாமர்த்தியசடங்குகட்கு விசேடதள்ளு படிகள்!!! ஒஸ்லோ தவிர்ந்த நோர்வேயின் பிற நகரங்கட்கும் அனுப்பிவைக்கப்படும்.

www.tamilarangam.net

# Gulf Travels




உங்கள் உல்லாசப்பிரயாணத்தில்
உயிர் உடமைகளுக்கு உத்தரவாதம்.
நம்பகரமான பிரயாணச்சேவை.
மலிவான விலையில் பிரயாணச்சீட்டுக்கள்.
கலந்தாலோசனையின் பின், வசதிகளுக்கேற்ப
நிர்ணயிக்கப்படும் விலைகள்.
சுருக்கமான, வசதியான பறப்புக்கள்.
பறப்புகள் பற்றிய அறிவுரைகள்.

அனைத்தையும் மிகச் சிறந்த முறையில்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்:

தொடர்புகளுக்கு: அரவிந்தன்

# Gulf Travels

Skipper gt. 30, 0154 Oslo 1,
தொலைபேசி எண்: 22 41 24 14/ 22 41 92 91.
தொலை நகல்: 22 41 11 87.

www.tamilarangam.net

LANDBRUKSDEPARTEMENTET

## Avgiftsendring fra 1. januar 2000

**Næringsmiddelavgift**
Avgiftssatsen for norske råvarer, importerte råvarer og halvfabrikata som skal brukes i næringsmidler blir økt fra 0,73 % til 0,82 %. For importerte ferdigvarer blir satsen økt fra 0,58 % til 0,64 %.

**Kjøttkontrollavgift**
Dagsverksatsen i "Forskrift om kjøttkontroll-avgift" blir økt med 5 % fra 2320 kr til 2440 kr.

Innrykket av Statens informasjonstjeneste A-22/99


சுலக்சனா பத்மநாதன்





வைரகா, சங்கீதா, ஜசிதா, கௌதமன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Editor/Co-ordinator/Policy maker: N.S.Pirabu, B.Sc.,Dip.Jour.(U.K)
SARVADESA TAMILER L.Hervigsv.69A, 3035 Drammen
Norway .Tel.Fx.00.47.32.813416
Abonnement:90,-kr/år C-BLAD Postbanken,Giro:05320899453

SARVADESA TAMILER: NORGES TAMILSKBLAD ETBL:1994 2000 - NR:1 nsp@c2i.net

KOMMUNAL- OG REGIONALDEPARTEMENTET

## Ny lov om husleieavtaler (husleieloven) fra 1. januar 2000

Den nye loven skal erstatte någjeldende husleielov og husleiereguleringsloven. Den skal regulere rettigheter og plikter mellom partene i husleieforhold. Det blir innført et generelt leieprisvern. Oppsigelsesvernet for tidsubestemte leieavtaler styrkes, og det blir innført minstetid på tre og ett år for tidsbestemte leieavtaler.

For mer informasjon om loven kan du ta kontakt med Kommunal- og regionaldepartementet, Bolig og bygningsavdelingen, på telefon 22 24 71 01, eller e-post: postmottak@krd.dep.no. Du finner mer informasjon i Norsk lysingsblad nr 295 21. desember 1999.

Statens informasjonstjeneste A-21/99



ரூபி, யசி, யெனிசா, வைரகா, தினேஸ், நிக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்